# தொண்டன்

ஆடி - 1987



## கிறிஸ்தவ இலக்கியத் திங்களேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஆடி — 1987
மலர்: 19 இதழ்: 6

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

## உள்ளே..

1. இதயத்திலிருந்து — 1
2. விவிலியமும் வாழ்வும் — 2
3. செய்தி முரசு — 4
4. இது பொது நிலையினர் — 5
5. இளைஞர் அரங்கம் — 7
6. ஈன்ற பொழுதில்... — 10
7. சர்வதேச கத்தோலிக்க — 13
8. கவிஆரம் — 15
9. திருமறையைத் தெரிந்து — 16
10. எதிரொலி — 18
11. அந்த ஒரு நிமிடம் — 20
12. சுவைக்கச் சில துளிகள் — 22
13. சொந்தம் எப்போதும் — 24
14. குறுக்கெழுத்துப் போட்டி — 27

சமயம் அனைத்தும் வாழ்க்கையைப் பற்றியது
சமயத்தின் வாழ்க்கை என்பது நன்மை செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீ நிறைவுபெற விரும்பினால் போய் உன்
உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு.
மத். 19/21.

# இதயத்திலிருந்து....

பல பிரச்சினைகளைகளுக்கு மத்தியிலும் எமது நாடு அபிவிருத்தி அடைந்துள்ளது, பொருளாதாரத்தில் வளர்ந்துள்ளது என்று கூறப்படுகிறது. பொருளாதாரம் வளர்கிறதோ என்னவோ அகதிகள் வளர்ந்துகொண்டிருக்கின்றனர்.

கடல்தாண்டி ஓடுகின்ற அகதிகள் ஒருபுறம். சொந்த நாட்டிலேயே வீடிழந்து, பொருள் இழந்து, உற்றூர் உறவினரை இழந்து அனைத்தையுமே இழந்து அனாதைகளாகி நிற்போர் இன்னொரு புறம்.

இவ்வாறு மனித மாண்பு உருக்குலைந்து காயப்பட்டு நிற்கின்றபோது கழுவி மருந்திடுவது மட்டும் போதுமென்று கிறித்தவம் அமைதி அடையக்கூடாது.

நல்ல சமாரித்தர்களாகவே வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டவர்கள் நாங்கள்.

காயம் வராது தடுக்கின்ற — காயம் வருவிப்போரை எதிர்க்கின்ற களங்களையும் நாம் எட்டிப்பார்க்க வேண்டும்.

நமக்கும் காயம் வந்துவிடுமே! கிறிஸ்து நமக்காகக் காயப்பட்டார் என்று எத்தனை காலந்தான் கூறிக்கொண்டிருப்பது?

நற்செய்திப் பணி என்பது அறநெறிக் கொள்கையல்ல அது புதிய வானம், புதிய பூமி படைக்கும் புரட்சிகரப் பணி


நெஞ்சிலே செருக்குற்றவர்களை சிதறடித்தார்,
வலியோரை அரியணையினின்று அகற்றினர்,
தாழ்ந்தோரை உயர்த்தினர்
பசித்தோரை நலன்களால் நிரப்பினர்,
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினர்.

என்னும் மரியாளின் கீதத்தில் நற்செய்திப் பணியின் பல்வேறு முனைப்புகளும் தோன்றுகின்றதல்லவா?

மலர்வேந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியமும் வாழ்வும்



ஜெருசலேம் நகரிலே இன்றும் 'தாவீதின் அரும் பொருட்காட்சிச் சாலை' என்று உண்டு. அப்பொருட்காட்சிச் சாலையில் பல பழங்காலப் பொருட்களுக்கு மத்தியில் சில சவர்க்காரக் கட்டிகளும், தோலினாற் செய்யப்பட்ட எபிரேய எழுத்துக்கள் கொண்ட சட்டைகளும் சப்பாத்துகளும் உண்டு. அச்சவர்காரக் கட்டிகள் யூதர்களின் கொழுப்பினாற் செய்யப்பட்டவை. அந்தத் தோற் சட்டைகளும் சப்பாத்துகளும் புனித எடுகள் எழுதப்பட்ட தோற் சுருள்களினாற் செய்யப்பட்டவை. இத்தகைய காட்டுமிராண்டித்தனமும், அநாகரீக — அனாசாரமான செயல்கள் யூதர்களுக்கு எதிராக நின்ற அடொல்ப் ஹிட்லரினால் 2ம் உலக யுத்த காலத்திற் செய்யப்பட்டன. யூதமக்கள் என்றுமே தங்களின் இலட்சியங்களுக்காக உயிரையும் விடத் தயங்கினதில்லை. திருமறை நூலில் தானியேல் ஆகமத்திலும், மக்கபேயர் ஆகமத்திலும் இத்தகைய வீரத் தியாகச் செயல்களை நாம் காணலாம்.

கி. மு 3ம் நூற்றாண்டில் அந்நியர்களான கிரேக்கர் இஸ்ராயேலை ஆக்கிரமித்து அவர்களது பண்பாட்டையும் நாகரீகத்தையும் யூதர்கள் மேல் திணிக்க முற்பட்ட காலத்தில் விடுதலை உணர்வுகளுடனும், சுதேச உணர்வுகளுடனும் இவ்விரு ஆகமங்களிலும் எழுதப்பட்டன. அந்நிய நாகரீகங்களுக்காகவும் பதவி உயர்வுகளுக்காகவும் ஆசைப்பட்டு தன் மதத்தையும், சுதேசப் பண்பாட்டையும் கைவிடுவதைவிட சாவதேமேல் எனத் தீயிலும், சிங்கங்களின் குகைகளிலும் குதித்து வேத சாட்சிகளாகத் திகழ்ந்த தங்கள் முன்னோர்களின் சிறப்புமிக்க முன்மாதிரிகைகள் யூதர்கள் என்றும் பின்பற்றப்பட வேண்டிய சவால்களாகவே தென்பட்டன. யூதர்களில் வரலாறு முழுவதிலும் இத்தகைய சவால்கள் அவர்களுக்கு ஏற்படுவதையும் அவ்வேளையில் அவர்கள் தங்கள் ஆன்மீக இலட்சியங்களுக்கும், சட்டங்களுக்கும், சுதேசப் பண்பாட்டுக்கும் முதலிடம் கொடுத்துச் செயல்படுவதையும் நாம்காணலாம். யாத்திரை ஆகமத்தில் விபரிக்கப்படும் எகிப்திய அடிமை வாழ்வு நாளாகமங்களில் விபரிக்கப்படும் பபிலோனிய அடிமை வாழ்வு, பாரசீக, கிரேக்க, உரோமர்களின் ஆதிக்கத்தின்கீழ் ஏற்பட்ட அடிமை வாழ்வு முதலிய காலகட்டங்களிலெல்லாம் யூதர்கள் தங்கள் ஆன்மீக — சமூக இலட்சியங்களைப் பேணிப் பாதுகாக்கக் கொடுத்த விலை தங்கள் உயிர்களும், செல்வங்களுமே எனின் அது மிகையாகாது. வேதாகமம் முழுவதும் அவர்களுக்குச் சவால்கள் நிறைந்த ஒரு வாழ்க்கை ஏடாகவே தென்பட்டது. விவிலியத்தில் அவர்கள் தங்கள் முன்னோர்கள் எதிர்நோக்கிய சவால்களையும், தாங்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கேற்ற வழிமுறைகளையும் எண்பிக்கும் ஒளி விளக்கைக் கண்டனர். அத்தகைய புனித நூல் மாற்றானின் கைபட்டுப் புனிதம் கெடக்கூடாதே என்னும் அன்பு வெறியினால் அவற்றைக் குகைகட்குள்ளும் குழிகளுக்குள்ளும் புதைக்கவும் ஏன் தீயிலிட்டுப் பொசுக்கவும் அவர்கள் தயங்க

---

கர்ப்பிணி: ஏன் டாக்டர், பிள்ளை இலேசில பிறக்குதில்ல?

டாக்டர்: நாட்டில நடக்கிற அநியாயத்தைப் பார்த்து வெளியில வாறத்திற்கு பயப்படுகிறது போல.

ஓ. கே. குணநாதன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. மிகைப்பட்டதாயினும் தங்கள் புனிதப் புத்தகத்தில் அவர்கள் கொண்ட பற்றும் பக்தியும் மிக உயர்ந்ததே.

விவிலியத் திருமறை நூல்களை அவர்கள் ஜெபக்கூட்டத்திலும், ஆலய வழிபாடுகளிலும் வாசித்துத் தியானிக்கப் படவேண்டிய ஜெபப் புத்தகமாக மட்டும் கருதவில்லை. அரசியல், சமூக, அன்றாட வாழ்விலும், வழிகாட்டும் கை நூலாகவும் அதைக் கருதினர். விவிலியத்தில் புத்திமதிகளும், ஆசீர்களும், உற்சாகமூட்டும் சொற்களும் மட்டுமல்ல; எச்சரிக்கைகளும், அபராதங்களும் தீர்ப்புகளும் சவால்களும் கூடவே உண்டு என்பதை யூதர்களும் பின்னர் ஆதிக் கிறிஸ்தவர்களும் என்றுமே மறந்ததில்லை.

ஆனால் இன்று கிறிஸ்தவர்கள் விவிலியத்தின் சாறுகள், காரங்கள், அரிக்கும் உண்மைகள், சவால்கள் முதலியவற்றை அப்புறப்படுத்திவிட்டு அதனை ஒரு ஆன்மீக விளையாட்டுப் பொருளாக்கி அதை வைத்துக்கொண்டு விளையாடுவது மிகவும் பரிதாபத்துக்குரியது. ஆதாம் ஏவாள், சம்சோன் டிலைலா, தாவிதும், கோலியாத்தும், ஏசாயுவின் கூழ், பாபேல் கோபுரம் போன்ற கதைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமும், வியாக்கியானமும்; சங்கீதங்கள் நீதிமொழிகள், இறைவாக்கினர் போன்ற ஆகமங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பது வருந்தத்தக்க உண்மையே. ஏனெனில் அவ்வாகமங்கள் தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் உண்மைகளை அப்பட்டமாகக் காட்டும் மனச்சான்றுபோல அமைந்துள்ளன. அவற்றில் பாவத்தின் கொடுமைகளும், பாவ நாட்டங்களின் அகோரமும், தீமையின் அழிவும் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன, நன்மையின் மாண்பும், அதனால் வரும் நல் அமைதியும் எண்பிக்கப்படுகின்றன. நம் பாதைக்கு விளக்காக வாழ்க்கைக்கு ஒளியாக, அறிவிற்குத் தெளிவாக அமைந்துள்ள இப் புனித நூலை வெறும் விசுவாச விளையாட்டுப் பொருளாக சிலர் உபயோகிப்பது அதன் மகத்துவத்தை உணராததினால் என்பது மட்டுமல்ல, அது காட்டும் சவால்களை ஏற்க உறுதியற்ற மனநிலையினாலும் தான். ஆழமற்ற உறுதியற்ற சவால்களற்ற ஒரு சௌகரிய விவிலியத்தை வாசிப்பதால் பயன் ஏதும் இல்லை. பண்பட்ட மனதில் முப்பதும், அறுபதும், நூறுமாகப் பலன் தர வல்ல நல்மணி மொழிகளைக் கொண்ட நல்விதைக் களஞ்சியம் போன்றது விவிலிய வேதாகமம். பணிந்து போற்றுபவனுக்குத் தலைமுறை தோறும் தேறும் ஆசீர்களையும் இடறப்படுபவனுக்கு, அழிவைக் கொடுக்கும் கூரிய இரு கருக்குப் பட்டயம் போன்ற தீர்ப்புகளையும் கொண்டது விவிலிய வேதாகமம். மறுக்க முடியாத, எதிர்க்க முடியாத, நிறைவேறாது தீராத இறை ஆணைகளை உள்ளடக்கியது விவிலிய வேதாகமம்.

மனிதனின் வாழ்வுக்கும், விடுதலைக்கும், அமைதிக்கும், முழுமைக்குமாக அருளப்பட்ட இப்புனித புத்தகம், இறைவனின் அன்பின் ஆழ அகலங்களை எடுத்துக்காட்ட அருளப்பட்ட இத் தெய்வீக அன்புக் காவியம் நம் பாதைக்கு விளக்காகவும் வாழ்க்கைக்கு ஒளியாகவும் அமையுமெனின் நம் முக்திக்கு அதுவே வழியாகவும் அமைநதுவிடும்.

## தொண்டன் ஆசிரியர் வெளிநாடு பயணம்

தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியரும், சமூகத் தொடர்பு நிலைய இயக்குனருமான அருள் திரு. சி. பி. இராஜேந்திரம் அவர்கள் அமெரிக்கா சென்றுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் அனைத்துலக வானொலிக்கான அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள இவர் ஏறக்குறைய மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்தி முரசு

## பிராந்தியக் கூட்டம்

திருமலை பிராந்திய கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தின் பிராந்தியக் கூட்டம் பிராந்திய புதிய இயக்குனர் அருட்திரு. நோபட் ஒக்கஸ் அடிகளாரின் தலைமையில் 21-5-87 — 22-5-87 வரை நடைபெற்றது.

இதில் 65 உறுப்பினர்கள் பங்குபற்றினர். குறிப்பாக அருட்திரு செல்வராஜா சவரிமுத்து வினுல் ஆரம்பிக்கப்பட்ட உவர்மலை, லிங்கநகர் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தினர் பங்குபற்றினர். புதிய ஆண்டிற்கான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல்:

V. ஜெசிக்கா சாந்தி
பிராந்திய கி. வா.
செயலாளர்.

## ஏழைகளுக்கு உதவி

திருகோணமலையில் சிறப்பாக இயங்கிவரும் தி/புனித குவாடலூப் அன்னை ஆலய வின்சன் டீ போல் [சபையினர்] நாட்டின் சூழ்நிலை மத்தியிலும் ஏழைகளுக்கு உதவும் முகமாக 24-5-87 அன்று பங்குத் தந்தை வண. றேமன் அரசரெட்ணம் அடிகளாரின் அனுசரணையுடன் உதவி பங்கு தந்தை வண. செல்வராஜா தலைமையில் வினோத விளையாட்டுக்களை காண்பித்து பணம் திரட்டியுள்ளனர். இதற்கு அனைத்து தமிழ், சிங்கள மக்களும் பங்குபற்றி ஆதரவு கொடுத்துச் சிறப்பித்துள்ளனர்.

தகவல்:

செல்வன் அருள்தாஸ்
ப மே. சபை,
செயலாளர்.

## துறவற அர்ப்பணம்

எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர் குரூஸ் அன்ரனி அவர்கள் தமது துறவற அர்ப்பண வார்த்தைப்பாட்டை எதிர் வரும் 19-9-87 அன்று வத்திக்கானில் எடுக்க வுள்ளார். கல்முனைப் பங்கைச் சேர்ந்த இவர் எமது மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் பயிற்சி பெற்ற மறையாசிரியராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆசிரியர் : எதிர்ச்சொல் கூறு; கருமை
மாணவன்: வெண்மை
ஆசிரியர் : வானம்
மாணவன்: பூமி
ஆசிரியர் : உண்மை
மாணவன்: லங்கா புவத்
ஆசிரியர் : ?......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரம்

திருச்சபையின் வரலாற்றில் முன் பொருவகையிலும், தற்போது இன்னுமொரு வகையிலும் அதன் கட்டமைப்பு விளக்கப்பட்டது, விளக்கப்படுகிறது. முன்னைய 'பிரமிட்டு' (முக்கோண) அமைப்பு தவறு என்று தற்போதைய திருச்சபையால் சொல்லப்பட்டு (செயலளவில்?) வருகின்றது. இருந்தும் அவ்வகையில் பார்த்தால் பொது நிலையினரை அடித்தளமாகக் கொண்டுதான் மேலே கூர்ப்பகுதிக்கு ஏறிச்செல்லும் ஒழுங்கில் துறவறம், குருத்துவம், ஆயர், கருதினல், பாப்பரசர் என்று உண்மை நிலை என்ன? என்பதையெல்லாம் உணர்ந்து கொண்டு கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளில் பார்வையாளர்களாக இல்லாது பங்குதாரர்களாக மாறவேண்டும்!

கத்தோலிக்க திருச்சபை பொது நிலையினருக்கான ஒரு திருச்சபை என்பதை மறவாமல் இது எனது திருச்சபை என்ற உணர்வுடன் பொது நிலையினர் செயற்படத் தொடங்க வேண்டும்.

கிறிஸ்துவிற்குப் பின் திருமறை தீபோல் திக்கெட்டும் பரவியபோது பொதுநிலையினரின்

# இது பொது நிலையினர் ஆண்டு

- புளியடிக்குடா, ஆனந்தா A.G. இராஜேந்திரம் -

அதன் கட்டமைப்பு அமைகிறது. இங்குபலமான அத்திவாரமாகப் பொது நிலையினர் இருந்தாலே அதன்மீது அமைந்த உச்சிப்பீடம் உறுதியாக இருக்கும். இதுவரை உச்சபீடம் அதிகாரபீடம் குறிப்பிடத்தக்க ஆட்டம் காணவில்லை (நரகத்தின் வாசலே அதை மேற்கொள்ளாது என்ற நிலையில் இது சாத்தியமே). எனவே, பொது நிலையினர் எனும் அடித்தளம் உறுதியானதாகவே இருக்கிறது. ஆனாலும் ஆளுவோர், ஆளப்படுவோர் மனநிலை அக்கட்டமைப்பில் வேரூன்றியதால் பொது நிலையினர் முக்கியத்துவமற்றவர்களாக்கப்பட்டனர்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சகலரும் சமன் எனும் சக்கர அமைப்பில் பொது நிலையினர் ஏனையோருக்குச் சமமாக திருச்சபையில் இனங்காட்டப்படுகின்றனர். எனவே, அவர்கள் முக்கியமானவர்களாகின்றனர். இது புதிய கண்டுபிடிப்பல்ல; ஆனால் புதிய கண்ணோட்டம் இதனால், இதுவரை 'பிரமிட்'டின் உச்சியினின்றும் கீழ்நோக்கி பார்த்தோரெல்லாம் தம் மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டியாகிறது; அதுபோல அண்ணார்ந்து நோக்கி நின்ற பொது நிலையினர் எல்லாம் நேர் கொண்ட பார்வை கொள்ள வேண்டும் திருச்சபையில் எங்கு நிற்கிறார்கள்? தமது பங்களிப்பு பிரதம பாகமாக இருந்தது. தங்கள் மறைக்காக, விசுவாசத்திற்காக உயிரையே விட அவர்கள் தயங்கியதில்லை. எண்ணிலடங்கவல்ல ஒருசிலரது விசுவாச வாழ்வு காரணமாக எண்ணற்ற மக்கள் கிறிஸ்துவின் ஒளியைக் கண்டனர். இவ்வேளைகளில் பொது நிலையினரைச் சார்ந்ததாகவே கிறிஸ்துவின் சீடர்களின் சேவை அமைந்திருந்தது. இராயப்பர், சின்னப்பர் என்று புனிதர் வரிசையைப் பார்த்து வருகையில் அவர்களின் சாதனைகளின் பின்னணியில் பொதுநிலையினர் எந்தளவு முக்கிய இடம் வகித்தனர் என்று கண்டு கொள்ளலாம். தலத்திருச்சபையை, அதன் மக்களைப் பாதுகாத்துப் பராமரிக்க, செபித்து நோயகற்ற, உண்மையைச் சொல்லி விசுவாசத்தைப் பரப்ப குழுக்களாகச் சேர்ந்து செயற்பட்டு வந்த வரலாறு சரித்திரமாகும்.

ஓய்வு நேரம் என்பது சோம்பலை வளர்ப்பதற்குப் பயன்படுவதன்று. எடுத்தபணி அல்லாத அடுத்த பணியைச் செய்வதற்கு உதவுவதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்நாட்டில் . . .

இலங்கை மண்ணில் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றை ஊன்றிக் கவனிப்பவர்களுக்கு ஒரு காலகட்டத்தில் ஒரு தனிமனிதனது ஆளுமை மற்றும் ஆன்ம வேட்கையின் பின்னணியில் பொதுநிலையினரே இங்கு திருச்சபையை அணையவிடாது காப்பாற்றிய உண்மை புரியும். அந்த தனிமனிதன் தூண்டிவிட்ட உறுதியான, விசுவாசம் என்கிற தீயானது அணையாமற் பாதுகாத்தவர்கள் பொது நிலையினரே.

சுமார் 300 வருடங்களின் முன் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையைப் பாதுகாத்து வழிநடத்த ஒரு குருதானும் இல்லா நிலை இருந்தது. டச்சு அரசின் கீழ் கத்தோலிக்கர் கொடுமைப்படுத்தப்பட்டாலும் நீறுபூத்த நெருப்பாக விசுவாசத்தை ஓரளவாவது மறைவாகப் பேணிப்பாதுகாத்தது 'பொதுநிலையினர்' கத்தோலிக்கரே.

ஆனல், சரியாக முன்னூறு ஆண்டுகளின் முன் இம்மண்ணில் காலடி வைத்த அந்த தனிமனிதன் வந். யோசே வாஸ் முனிவரின் தணியாத இறைதாகமும். சேவை மந்திரமும், எந்தச்சிலுவையையும்,சிலுவையின்தாசருக்காக ஏற்றுக்கொள்ளும் துணிவும் காரணமாக நாடெங்கும் புயல்போல செயற்பட்டு நீறு அகற்றி விசுவாச நெருப்பை ஊதிப் பற்ற வைத்தார். தனிமனிதனவர் மன்னர், யாழ்ப்பாணம், கண்டி. மட்டக்களப்பு (சொறிக்கல்முனை?) என்றெல்லாம் செயற்பட்டுத் திரிந்தபோது தலத்திருச்சபைகளைப் பேணி விசுவாசத்தை நிலைநாட்டிப் பாதுகாத்து நின்றது பொதுநிலையினர் தான்.

இந்த வகையில் இன்றைய இலங்கைத் திருச்சபையின் வரலாறு அதன் பொதுநிலையினரின் வரலாருகத்தான் அமைகிறது. நாளடைவில் இவ்விசுவாச மக்கள் கூட்டத்தின் மறைவாழ்வு ஆல்போல் தழைத்து, வளர்ந்து, வேரூன்றி இன்றைய நிலைவரை வளர்ந்துள்ளது.

## இன்றுள்ள நிலை

இன்றுள்ள காலகட்டத்தில் பொதுநிலையினரின் மனப்பான்மை திருச்சபை மட்டில் ஏனோதானோ என்றமைந்திருப்பது ஒருவேதனையான உண்மை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல பார்வையாளர் மட்டத்திலேயே பொதுநிலையினர் — பரவலாக — தலத்திருச்சபையைப் பொறுத்தமட்டில் செயற்பட்டு வருகிறார்கள். இதற்குப் பலகாரணங்கள் இருக்கக்கூடும் ஆனாலும், குறிப்பிட்ட ஒரு சில பற்றியாவது இங்கு பார்ப்பது உகந்தது.

ஒன்று அன்றைய காலகட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் வழிபாடுகள் பிரதானமாக திருப்பலியில் மக்கள் பங்களிப்பு மிகவும் அரிதாகவே தேவைப்பட்டது. அந்தளவிலேயே அவர்கள் பங்களிப்பும் இருந்தது. வெறுமனே பூசை 'பார்க்க' சினிமாசாலைக்குப் படம்பார்க்கச் செல்வது போல் சென்று வந்தார்கள். மக்கள் வாழ்வின் நாளாந்த அங்கமாகிய இவ்வழிபாட்டிலே அவர்களது பங்களிப்பு இருந்ததற்கேற்ப சகல நிலைகளிலும் அவர்களது மனநிலையும், பங்களிப்பும் இருந்தது 1960ம் ஆண்டுகளில் வத்திக்கான் சங்கம் தந்த மாற்றம் செய்த விளைவு திருப்பலிப்பற்றி பூரண விளக்கம் அவர்களுக்குக் கிட்டியது ஆனாலும், மக்கள் மத்தியில் போதிய ஆர்வம் இன்னும் எட்டியதாகக் காணோம். குடும்பமாக அனைவரும் இறைவனுக்காக்கிடும் நன்றிப்பலியாகத் திருப்பலி அமைவதை அவர்கள் இன்னும் பூரணமாக சீரணித்துக் கொள்வதில்லை இதற்கும் ஏனைய சில நிலைமைகளுக்கும் இரண்டாவது காரணி விளக்கம் தரக்கூடும். (தொடரும்)

சேர்ந்து-பார்த்து-பழகி-சிரித்து மகிழ்வதுதான் நட்பு எனக் கருதுவது தவறு. பழகாவிட்டாலும், பண்பாலும், உணர்வாலும் ஒத்திருப்பதே உண்மை நட்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளைஞர் அரங்கம்

# முகமூடிகள்

# (MASKES)

❋ எம் சமூகத்தில்

❋ எம் நாட்டில்

❋ ஏன்? இந்த உலகம் முழுவதும் முகமூடிகள் நிறைந்துவிட்டன. தாய் — சேய் இடையேயும், நெருங்கிய நண்பர்கள் மத்தியிலும் முகமூடி வாழ்க்கை இன்று உருவாகி விட்டன

இதனால்,

❋ முரட்டுத் தன்மைகள் — மிருக உணர்ச்சிகள்.

❋ உடும்புப் பிடிவாதங்கள் — குழிபறிக்கும் கீழ்க் குணங்கள்.

அனைத்துப் பேரிடமும் — அமைப்புக்களைச் சார்ந்தவர்களிடையேயும், நாடுகளை ஆள்பவர்கள் அனைவரிடமும் நிரம்பிவிட்டன. உதவி செய்வதுபோல் நடித்து, நேர்மையாக வாழ்கின்றேன் என பாசாங்கு செய்து, முறைமையாக மக்களை வழிநடத்துகிறேன் என வெளிவேடம் பூண்டு மக்களை,

❋ அநியாயச் சாவுகளுக்கும்

❋ அட்டூழியச் செயல்களுக்கும்

❋ அநாகரீக நடத்தைக்கும்

இட்டுச்செல்லும் தலைவர்களின் செயற்பாடுகளை நோக்கும்போது, முகமூடி வாழ்க்கை எனக் கூறாமல் இருக்கமுடியாது.

— முடிவைச் சொல்ல வேண்டியவர்களே பிரச்சினையை தோற்றுவிப்பவர்களாக செயற்பட்டு மௌனமாக அதற்குப் பரிகாரம் தேட முற்படும் சம்பவங்கள் எம் நாட்டில் மட்டுமல்ல. உலகின் பல நாடுகளிலும் இடம் பெறுகின்றன.

— அங்கும் தட்டி — இங்கும் கிள்ளி விளையாடும் நாரதர்களாக சர்வதேச ரீதியில் இயங்கும் தலைவர்களையும், நாட்டின் ஆட்சியாளர்களையும் முகமூடிகள் என்றே கூறவேண்டும்.

இம்முகமூடிகள் மட்டில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

இன்றையச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டுள்ள முகமூடிகளை இனம் காணும் காலம் மிக நெருங்கிவிட்டது போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன. உண்மைகள் வெளியாகும்போது' உரிமைகள் கிடைக்கும்போது, உண்மை அகச் சுதந்திரம் கிடைக்கும்போது இம்முகமூடிகளை கிழிக்க மக்கள் குறிப்பாக இளம் உள்ளங்கள் தயாராக இருக்கவேண்டுமென அன்புக்குரல் கொடுப்பது —

**— கலையுலகன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

★

ஏழு எட்டு வயதினிலே
முழுமையுடன் போராட்டம்!
ஏழு எட்டுப் பிள்ளையென்றால்
வறுமையுடன் போரட்டம்!

★

பதினாறு வயதினிலே
எத்தனையோ போராட்டம்!
காளையர் இருந்து விட்டால்
நாளெல்லாம் போராட்டம்!

★

போராடும் வீரனுக்கு
எல்லையிலே போராட்டம்!
போர் வீரன் மனைவிக்கு
மனதினிலே போராட்டம்!

★

நோயாளி சுகம் பெற
மருந்தோடு போராட்டம்!
நோய்தீர்க்க முடியாதெனில்
சாவோடு போராட்டம்!

★

பொன் சேர்க்க, பொருள் சேர்க்க
தொழிலோடு போராட்டம்!
பொன், பொருள் வந்துவிட்டால்
பதவியோடு போராட்டம்!

ரி. ஏ. அமலதாஸ்
லொயோலா இல்லம்
60 மத்திய வீதி
மட்டுநகர்

## ஏ.... வீடமைப்பு ஆண்டே!

இது
சர்வதேச
வீடமைப்பு ஆண்டா?
வீடொழிப்பு ஆண்டா?

ஒரு புறம் -
மாதிரி கிராமங்களை
மந்திரி திறந்து வைக்க
மறு புறம் -
மந்திரம் கற்ற எம்
தந்திரப்படையினர்
பறந்துக் கொண்டே
குண்டு மழையை பொழிந்து
குடியிருக்கும் வீடுகளை
குட்டிச் சுவர்களாக்கும்
அகோர ஆண்டிற்குத்தான்
வீடமைப்பு ஆண்டு என்று
வீர முழக்கமா?

ஐ நா. அமையம்
ஆண்டிற்கு ஒரு நாமத்தை
அறிமுகப்படுத்த
இங்கே ......
அதற்கெதிராகவல்லவா
அன்றாடம் நடக்கிறது!
சமாதான ஆண்டில்
சமாதி கண்ட
சவங்கள் எத்தனை?

ஏ......!
வீடமைப்பு ஆண்டே!
நீ ...
புதிதாக வீட்டை
கட்டாவிட்டாலும்
கட்டிய வீட்டையாவது
கொஞ்சம் கருணையுடன்
விட்டுவைக்க மாட்டாயா?

எம். எஸ் பெனடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வியில் ஊடுருவல்கள் - ஒரு நோக்கு

இலங்கையின் உயர்கல்வித்தாபனங்களிலே அடிக்கடி பிரச்சினைகள் எழுகின்றதும் அது தொடர்பாக அவை இழுத்து மூடப்படுகின்ற சம்பவங்களும் பிறகு சிறிது காலத்தின் பின் திறக்கப்படுவதும் பழக்கப்பட்டு விட்ட நிகழ்ச்சிகளாகிவிட்டன. இதனால் வருடாவருடம் இந்நிறுவனங்களின் கல்வித் தவணைகளிலே கணிசமான காலப்பகுதி விடுமுறைக் காலமாகவுள்ளது இவ்வாறான திடீர் மூடுவிழாக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குரிய தற்காலிகமான ஒரு தீர்வாக அமையுமே ஒழிய ஒரு நிரந்தரத்தீர்வாக அமையாது. மேலும் இந்நடவடிக்கை இலங்கையின் உயர் கல்வித்துறையில் ஒரு மந்தப் போக்கினை உண்டுபண்ணும் அதேவேளை சமூகரீதியான அமைதியீனங்களுக்கும் குளறுபடிகளுக்கும். ஒரு காரணமாகவும் அமையலாம்.

உயர்கல்வி வாய்ப்பை பெற்ற ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் மூன்று வருடங்களினை மேற்படி நிலையங்களிலே கழிக்க வேண்டியுள்ளது இக்காலப்பகுதியில் ஒவ்வொருவரும் தங்கி வாழ்கின்றனர். அரசாங்க உதவு தொகைகள் உண்மையில் தேவைகளின் கணிசமான பகுதியை ஈடுசெய்யவே போதுமானதாகவுள்ளது. அத்துடன் இத்தங்கி வாழும் காலப்பகுதி உயர்கல்வித் தேவைக்கான சந்தர்ப்பச் செலவாகவும் அமைகிறது. ஏனெனில் இக்காலப்பகுதியில் பொருள் திரட்டும் தேவை தியாகம் செய்யப்படுகிறது. எனவே உயர் கல்வி பயிலும் ஒவ்வொருவரும் தங்கி வாழும் நிலையிலிருந்து விடுபட்டு வாழ குறித்த காலத்தில் பட்டம் பெற்று வெளியேற வேண்டிய தேவை நியாய பூர்வமானதாகும். அடிக்கடி உயர்கல்வி நிலையங்கள் மூடப்படுவதால்.

1. ஒருவர் தனது கற்கை நெறியை குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.
2. குறித்த கால எல்லைக்குள் கற்கைநெறியின் பாடப்பரப்புகளை முழுமையாக கற்றுத்தேற முடியாது போகின்றது.

இவற்றைவிட வீடுகளிலே தொடர்ந்து தங்கி வாழ்வது மாணவரின் மத்தியில் விரக்தியைத் தோற்றுவிக்கலாம். இதனால் உளரீதியான பாதிப்புகள் ஏற்பட்டு உயர்கல்வியை வெறுக்கும் நிலை ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட இரு முக்கிய காரணங்களாலும் உயர்கல்வியின் தரம் வீழ்ச்சியடைய இடமுண்டு ஏனென்றால் பரீட்சைக்காக மட்டும் படிக்கும் நிலமை இங்கே தோன்றுகின்றது. உயர்கல்வியைப் பொறுத்தவரை இஃதேக் காத்திரமான தோற்றப்பாடல்ல, உயர்கல்வி வெறும் கிளிப்பிள்ளை விளையாட்டோ அல்லது புத்தகப்படிப்போ மட்டுமல்ல. இம்மூடுவிழாக்களின் பிரதிவிளைவாக ''எப்போது பட்டத்தைப் பெற்று வெளியேறுவோம்'' என்ற மனப்போக்கே ஏற்படுகிறது. ஒழிய உயர்கல்விக்கே உரிய ஆராய்ச்சி, கண்டு பிடிப்புகள் போன்றவற்றைப் பற்றி சிந்திக்கவும் நேரமில்லை. உயர்கல்வியை பயிலும் ஒவ்வொருவரும் தற்போது எதிர்நோக்கும் ஆபத்துக்களும் பிரச்சினைகளும் இந்நிலையை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

''உயர்கல்வி பயிலும் புத்திஜீவிகள் நாட்டின் எதிர்காலத் தலைவர்கள்'' என்று மேடைகளில் முழங்கிவிட்டால் மட்டும் போதாது அதனை செயலிற்காட்டவும் அதிகாரத்திலுள்ளோர் முன்வரவேண்டும். இன்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருமே அதிகார யந்திரத்தின் முன் ''சந்தேகப் பேர்வழிகளாகவே'' கருதப்படுகின்றனர். இதனால் புத்திஜீவிகளாக வர்ணிக்கப்பட்டவர்கள் இன்று சமூகத்தின் முன் ''குற்றவாளிகளாக'' உருவகிக்கப்பட்டுள்ளனர். தாம் குறித்த உயர் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள் என்று சொல்லத் தயங்குகின்றனர். பயப்படுகின்றனர்

உயர்கல்வி நிலையங்களில் உருவாகும் பிரச்சினைகள் பெரும்பாலும் அரசியற் சார்புடையனவாகவே இருக்கின்றன. அரசியலில் ஈடுபட ஒரு சனநாயக நாட்டிலே உள்ள வயது வந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு. இளைஞர்களை சில அரசியற் சித்தாந்தங்கள் கவரலாம் ஆனால் அவர்களை தகுந்த முறையில் ஆதரித்து மதிபளித்து வழிநடத்த வேண்டியது தலைசிறந்த அரசியல் வாதிகளினது பொறுப்பாகும். ஆனால் இன்றோ அரசியல்வாதிகளுக்கு உயர்கல்வி பயில்பவர்கள் சிம்ம சொப்

—(21ம் பக்கம் பார்க்கவும்)—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈன்ற பொழுதில்...



"பறவே...! நீ கெட்ட கேட்டுக்குகாசு வேற கூடக் கேக்றியா... உன்ட கோலத்திற்கு தந்தது போதாது போல... என்று கத்திக் கொண்டு படலையை இழுத்து தள்ளி விட்டு ஒழுங்கையில நடந்தான் கனகசுந்தரம்.

திறந்து விடப்பட்ட படலைக்கதவு மேகலையின் உருவத்தை தெளிவாக காட்டியது. வறுமையினுல் வதங்கிய உருவம் ஏழ்மையின் சின்னங்கள் அவளுடைய உருவத்திலேயும் அவளுடைய இல்லத்திலேயும் தெளிவாகத் தெரிந்தது. முந்தானையைப் பிடித்துக் கொண்டு நின்ற இரண்டு சின்னனுகளும் கனகரின் சத்தத்திஞல் வெருண்டு விழிபிதுங்க ஒழுங்கையை நோக்கின.

கனகரின் வியாக்கியானம் தெருவால மெல்ல மெல்ல நொண்டி நொண்டி நடந்து வந்த கணபதிக்கு கேட்கத்தான் செய்தது. தலையை தூக்கிப் பார்த்தவனுக்கு பேசப் பயந்து

## சிறுகதை

கூனிகுறுகி நிற்கின்ற மேகலையின் உருவம் தெரிந்தது. இப்படியும் ஓர் அவல நிலையை என்னுடைய கண்கள் பார்க்கவும் வேண்டுமா என்று எண்ணியவனுக தலையைத் தாழ்த்தியபடி அவ்விடத்தை விட்டு எட்டி நடை போட எண்ணியவனுடைய விருப்பத்தை அந்த முடக்கால்கள் தடை செய்தன.

இழுத்து இழுத்து காலை வைத்தவனின் எண்ணங்களும் இழுபறிபட்டுச் சென்றன.

படலையின் திறப்பால் கண்ட மேகலையின் உருவம் கண்முன் வந்து நின்றது. அது அவனுடைய இதயத்தில் இரக்கத்தை உள்ளத்தில் எண்ணங்களையும் தூண்டியது.

ஒரு வருடத்தின் முன் நல்லாகத்தான் இருந்த குடும்பம் அது. கணவன் மாணிக்கம் நாளாந்த மீன் பிடித் தொழிலில் வாழ்க்கை நடத்திஞலும் மேகலையையும் பிள்ளைகளையும் நல்லபடியே வைத்து இருந்தான். ஊரில் மானம் மரியாதையுடன் நல்ல குடும்பம் நடத்தியவனுக்கு ஏன் தான் அப்படியாயிற்றோ? நினைக்கவே மனம் கொதித்தது. அந்த நாள் பாழ்பட்டுப் போன ஒரு நாள். இரவில மீன் பிடித்துவிட்டு இன்னும் இரண்டு வள்ளக்காரருடன் காலை வேளையில வள்ளம் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. திடீர் திடீரென துப்பாக்கி சூட்டுகள். கரையில எங்கேயோ மறைந்து நின்ற 'ஆமிக்காரன்கள்' சுட்டுத் தள்ளினர் இரண்டு பேர் பலி. ஒருவன் தண்ணில விழுந்து தப்பி வந்து கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை அது. வள்ளத்தில வந்த பயங்கரவாதிகளை சுட்டோம் என்று 'ஆமிக்காரன்கள்' போய்விட்டனர். ஆனால் அன்றில் இருந்து இன்று வரை மேகலையின் வாழ்க்கையில் சூரியனே உதிக்கவில்லை. கணவன் சுடப்பட்டு செத்துக் கிடப்பதைக் கண்டு மேகலை கதறியது. இப்போதும் நினைக்கவும் கணபதிக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது... ...

அநியாயம் பிடித்தவன்கள் ஒரு சின்ன தோட்டாவால ஒரு குடும்பத்தையே அழித்து விட்டான்கள். என்று எண்ணிய கணபதி விரைந்து நடக்க கால்களை இழுத்தான். முடமான கால் கஷ்டப்பட்டுத்தான் சரீரத்தை இழுத்தது.

உடலை இழுக்கக் கஷ்டப்படும் காலைப்பார்த்தவனுக்கு எண்ணம் இப்போது தன்னைப் பற்றியே திரும்பியது. அவனும் ஆறு மாதத்தின் முன் நல்லாகத்தான் இருந்தான். அரசாங்க ஆசிரியனாக தானும் தன்னுடைய கடமையும் என்று வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய எதிர்காலத்தைப் பற்றியும் அவனுடைய அம்மா எத்தனையோ கனவுகள் கண்டது உண்மைதான். ஆனால் இப்ப ...... தூர்ந்து போன அவளுடைய கண்களில் கனவுகளே இல்லையே. அவன் முடமான தன் பின் அவனிடம் கலியாணப் பேச்சை எடுப்பதையே விட்டுவிட்டா அவன் அம்மா

இழுத்து நடந்து ஒழுங்கையால திரும்பியவன் எதிரே கையில் துவக்குகளுடன் நிற்கின்ற 'ஆமிக்காரன்களை' கண்டான். ஏதோ சோதனையிடுவது போல தெரிந்தது.

அன்றும் இப்படித்தான் சோதனை போட்டுக் கொண்டு இருந்தார்கள். திடீரென ஒரு வெடிச்சத்தம். தொடர்ந்து படபடவென துப்பாக்கி வெடிகள். கீழே விழுந்த கணபதி ஆஸ்பத்திரியில் தான் கண் விழித்தான். கணுக்காலில் ஒரே வலி. துப்பாக்கிக் குண்டு பட்டு ஆப்பிரேசன் செய்து தான் குண்டை எடுத்தது என்று அம்மாதான் கூறினாள்.

மூன்று மாத ஆஸ்பத்திரி வாழ்க்கையில அதிகம் சிந்தித்தான் கணபதி. படித்தவன் தானே. அன்று அனாவசியமாக உயிர்விட்ட அப்பாவி மக்களை எண்ணினான். மேகலையைப் போல எத்தனை குடும்

— யோகி —

பங்கள் அநாதரவாக விடப்பட்டதோ...... நாட்டைப் பிடித்து இருந்த இந்த அநியாயத்தில் இருந்து விடுதலையே கிடைக்காதா? சுதந்திரமாக பயமின்றி ஆணும் பெண்ணும் குழந்தைகளும் சொந்த ஊர் தெருக்களில முன்னையப்போல ஓடி விளையாட முடியாதா? உள்ளக் கொதிப்பில் அவனுக்கு கிடைத்த விடை இது தான். 'கால் சுகமாகட்டும் படிப்பும் வேலையும் இனி தேவையில்ல, வேண்டியது விடுதலையும் தன்மானமும் தான் என்று எண்ணிக்கொண்டான்.

ஆப்பிரேசனோ என்னவோ... அன்றில் இருந்து அவன் கால் சரிப்படவில்லை. இனியும் சரிப்படாது என்று ஊர் டொக்டர் கூறிவிட்டார். ஆண்டவன் வேறுவிதமாக தீர்மானித்து விட்டான் போலும்.

ஆஸ்பத்திரியை விட்டு கணபதி ஊனனாக நடக்க கஷ்டப்பட்டவனாக வீடு வந்து சேர்ந்தான். அவன் போட்ட திட்டங்கள் காற்றில் பறந்தன.

வாழ்க்கை என்பதை ஓடாமல் நிற்பாட்ட முடியாதே. எந்த ஆட்சிக்கெதிராக போராட்டம் என்று ஆஸ்பத்திரியில் எண்ணினானோ அதே ஆட்சியாளரின் தயவையே வாழ்க்கையை ஓட்ட நாடவேண்டியவனானான். மீண்டும் அரசாங்க ஆசிரியனாக தன் கல்லூரியில் கடமையை செய்தான். வயிறு பிழைக்கவேண்டும் என்றால் அதைதவிரவேறுவழி அவனுக்கு தெரியவில்லை. குணமான பின் வேலை பார்த்த முதல் மாத சம்பளத்திற்கு கைநீட்டும் போது அவனுக்கு அவமானமாகத் தான் தெரிந்தது. எனினும் எதிர்கால சமுதாயத்திற்கு தான் அளித்த கல்வியின் பயனாக ஊதியம் என்று உள்ளத்தை தேற்றிக் கொண்டு சம்பளத்தைப் பெற்றுக் கொண்டான். அத்துடன் பெற்ற சம்பளத்தை மூன்றாகப் பிரித்து ஒரு பகுதியை மட்டும் தன்னுடைய தேவைக்கு வைத்துக் கொண்டு ஒரு பகுதியை போராட்ட நிதிக்கும் மற்றொன்றை தலைவனை இழந்து தடுமாறி நிற்கும் குடும்பம் ஒன்றுக்கும் கொடுத்து தன்னுடைய உள்ளத்தை ஆறுதல் படுத்தினான்.

தன் இனம் தலை நிமிர்ந்து வாழ தானும் ஏதோ செய்கின்றேன் என்பது ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த அவனுக்கு இப் போது கேட்ட கனகசுந்தரின் வார்த்தைகள் மீண்டும உள் ளப் புண்ணை கிளறி விட்டன.

மேகலை... அவளை எண் ணும் போது பாவமாக இருந் தது. கணவனை இழந்தவள் ஆதரிப்பார் யாரும் இன்றி இருந்ததை மெல்ல மெல்ல விற்று தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் ஓரளவு பரா மரித்தாள். கையில் இருந்தது ஒய்ந்துபோக முதலாளி கனக சுந்தரத்திடம் வேலை கேட் டாள்.

''மீன்வாடியில் ஏதாவது போட்டுக் கொடுங்க, ஐயா'' என்று கேட்ட மேகலையை ஏற இறங்க பார்த்து கனகசுந் தரத்திற்கு எண்ணம் எல்லாம் எங்கோ ஓடியது.

வேலை போட்டுத்தான் கொடுத்தார். அதைவிடக் கூடவும் எதிர்பார்த்தார். பாவம்... மேகலை... குழந்தை களுக்காக அவருடைய ஆசை களுக்கும் இணங்கினுள்.

ஊரில் பலரும் பலவித மாக பேசினுர்கள் எனினும் மூன்று வேளைக்கு இல்லா விட் டாலும் இரண்டு வேளைக்கு பிள்ளைகளுக்கு ஏதாவது கொடுக்க முடியுமே என்ற நிலையில் கனகசுந்தரம் கேட் டதை அவனுக்கு கொடுத் தாள்.

விபச்சாரி இல்லைத்தான் அவள் வைப்பாட்டி என்று ஊர் அளித்த பட்டத்திற்கு அவள் தலை குனிய வேண்டிய நிலையில்...

இப்போ கனகர் கூறியது...... அதைக் கேட்ட கணபதி யையே நாணிக் குறுகச் செய் தது.

''பறவே..! நீ கெட்ட கேட்டுக்கு காசு வேற கூடக் கேக்கிறியா... உன்ட கோலத் திற்கு தந்தது போதாது போல...'' கனகரின் வார்த் தைகள் மனக்கண்ணில் தோன்றி உள்ள தில் கண பதிக்கு எதிரொலித்தது.

நாடு இருக்கும் நிலையில இப்படியும் மனுசன்களா? ஒருத்தியின்ர ஏழ்மையை தனக்கு சாதகமாக்கி தங்கட சுயநலத்திற்கு வாழ்க்கையை பலியிடுகின்றுர்கள். அந்த 'ஆமிக்காரன்' அவளுடைய கணவனைக் கொன்றுன். மானம் மரியாதையென்று பொடியன்கள் சண்டைபிடிக் கின்றுன்கள். ஊரில பெரிய முதலாளியாம்...... கண்முன் ணுல மேகலையென்ற தமிழ் பெண்ணின் மரியாதை மானம் எல்லாம் கொலை செய்யப் படுகிறது. கேட்பதற்கு யார் உண்டு ? ? ?

சிதறிய சிந்தனைகள் கண பதியைக் குடைந்தன. மானம் மரியாதை என்று போட்ட சண்டையில நாளைக்கு சமா தானம் கிடைத்தாலும் சமூ கம் மானம் இழந்து வாழ வேண்டியது தானு? ?

பாரதப் போரின் ஆரம் பத்திலே அரிச்சுனன் கண்ண பிரானிடம் கேட்டானும் கண்ணு! இந்தப் போரிலே ஆண்கள் எல்லோரும் கொல் லப்பட்டு விட்டால் நாட்டிலே குலதர்மம் கெட்டுவிடுமே யென்று...

கண்ணன் என்ன பதில் கூறி ணுனே அது கணபதிக்கு ஞாப கத்திற்கு வரவில்லை.

மாறுக கணவனை இழந்து ஆயி ரமாயிரம் இளம் பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்று புலம்புவது எதிர்கால சமூக வரலாற்றில் எழுதி யிருப்பது கணபதியின் மனக் கண்முன் வந்தது. இதுதான் தன்னுடைய எதிர்கால சமூ கத்தின் நிலையென இவனுக்கு தெரிந்தது.

ஒரு காலை இழுத்து இழுத்து நடந்து வந்த அவ னைக் கண்ட ஆமிக்காரனுக்கு கேட்க கேள்வி வரவில்லைப் போலும். மெல்ல சோதனை போடும் இடத்தை கடந்து வீடு இருக்கும் திசையை நோக்கி விரைந்து சென்றுன் கணபதி.

''வந்திட்டியாமகனே...'ஆமிக் காரன்' சந்தியில நின்று சோ திக்கிறுனுமே'' இது அம்மா.

''என்னட்ட சோதிக்க அவ னுக்கு இனி வேற என்ன இருக்கு'' என்ற கணபதி ''அம்மா; நான் கலியாணம் செய்யப் போறுன் நீ என்ன சொல்லுறு? என்றுன்.

திடீரென வந்த இந்த கேள்வியால் நிலைதடுமாறிய அம்மாவுக்கு மறுகணம் உள் ளம் எல்லாம் பூரித்தது உடைந்த மனநிலையில் இருந்த மகன் இப்படி வாழ்க்கையைப் பள்ளி ஆக்கமாக ஏதும் சிந் திக்க மாட்டானு என்று தானே அவள் ஏங்கிக் கொண் டிருந்தாள்.

—(20ம் பக்கம் பார்க்கவும்)—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் 14வது மகாநாட்டு அனுபவங்கள் (தொடர்) - 7
# (14th Congress of UCIP)

14வது 'UCIP'யின் மகாநாட்டு நிகழ்வுகளின் ஒரு மதிப்பீட்டையும் — இறுதிநாள் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்காக ஒழுங்கு செய்து, மேற்கொள்ளப்பட்ட ''அக்ரா'' சுற்றுலா அனுபவத்தையும் இந்த இறுதிக் கட்டுரையில் குறிபபிட விரும்புகின்றேன்.

### அக்ரா சுற்றுலா :—

புது டெல்கியின் சூழல், மகாத்மாகாந்தி சமாதி, இந்திராகாந்தி சமாதி இவை போன்ற முக்கிய இடங்களை பிரதிநிதிகள் தங்களது ஓய்வு நேரங்களில்பார்வையிட்டனர். ஒக்ரோபர் 25ந் திகதி மகாநாட்டுப் பிரதிநிதிகளில் 200க்கும் மேற்பட்டோர் ஐந்து சுற்றுலா பேருந்துகளில் காலை 6 45க்கு அக்ரா நோக்கிப் பயணமானார்கள். ஒவ்வொரு பேருந்தும் 40 தொடக்கம் 50 பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது. 'அக்ரா' புது டெல்கியிலிருந்து தெற்கில் அமைந்திருந்தது. தொடர்ச்சியான 3 மணித்தியால பயணத்தின் பின்பு மதுராபுரியை நாம் அடைந்தோம். மதுராபுரி அக்ராவின் வடக்கில் அமைந்துள்ள பழமைவாய்ந்த பிரதேசம். ''கிருஷ்ணர்'' பிறந்த இடம் அவரது ஆலயத்தை முற்பகல் தரிசித்தோம். மதிய உணவு அக்ராவில் ஒரு ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மதிய உணவுக்குப்பின் அக்பர் கோட்டை (AKBAR FORT) அக்பர் கல்லறை தரிசிக்கப்பட்டது. பிற்பகல் 4.30 மணியளவில் உலக அதிசயங்களில் ஒன்றான ''தாஜ்மகாலை'' வந்தடைந்தோம். அக்பர் கோட்டையில் இருந்து தென்கிழக்காக நோக்கும்போது நிலவில் இருப்பது, போன்ற ஓர் அமைப்பில்தான் அதனைக் கட்டியிருக்கிறார்கள் என்பதை அங்கு உணரமுடிந்தது. யமுனாநதி கீழ் ஓட ''தாஜ் மகால்'' உயரமான ஓர் இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. தாஜ்மகாலுக்கு செல்வதற்கு மூன்று நுழைவாசல்கள் உள்ளது போல் மேற்கு, கிழக்கு, தெற்குத் திசைகளில் மூன்று கோபுரங்கள் உள்ளன, ஆனால் தெற்கில் உள்ள கோபுரத்தின் மூலமே தாஜ்மகாலுக்குச் செல்லலாம் வடக்குப் பக்கமாகவே ஜமுனாநதி ஓடுகின்றது.

தாஜ்மகாலின் கட்டிடக்கலையும் - கற்களின் (Marbles) ஒன்றிணைப்புமே மிகவும் கவரத்தக்க அம்சங்களாக விளங்குகின்றன. மின் விளக்குகள் இல்லை. மின்கலங்கள் மூலமாகவே கற்களின் பல்வேறுபட்ட ஒளிகளைக் காணமுடியும். தாஜ்மகாலைப் பார்க்க வருபவர்கள் குறிப்பாக மும்தாஜ் - சாஷகானின் மையத்துக்களை (கல்லறைகளை) பார்க்கின்றவர்கள் அனைவரிடமும் அவ்வேளையில் ஓர் சோகம் ஊடுருவுவதை உணரமுடியும்.

இன்றும் பல இளைஞர்கள் - இளம் யுவதிகள் அங்கு மும்தாஜ் - சாஷகான்களாக மாறியும் விடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாஜ்மகாலைச் சுற்றி கலைப் பொருட்சாலைகளும் சந்திக் கடைகளும் நிரம்பி வழிகின்றன.

மாலை 6 மணியானதும் தாஜ்மகாலைப் பார்வையிட முடியாது. நாமும் மாலைத் தேநீரை வெளி ஹோட்டல் ஒன்றில் எடுத்த பின்னர் டெல்கி நோக்கி விரைந்தோம். புது டெல்கியிலிருந்து தினமும் காலை ''தாஜ் கடுகதி'' (Thaj Express) புகையிரதம் புறப்பட்டு மீண்டும் மாலை அக்ராவிலிருந்து டெல்கிக்கு திரும்புகின்றது. ஒருவழிப் பயணத்திற்கு 3 மணித்தியாலங்கள தேவை, இதனை விட விமான சேவையும் உண்டு என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

### 14 வது "UCIP" மகாநாடு மதிப்பீடு

''UCIP'' யின் 14 வது மகாநாடு முதல் தடவையாக ஆசியாக்கண்டத்தில் அதுவும் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் நாடான இந்தியாவில் இடம் பெற்றது பெருமைப் படக்கூடிய மாபெரும் நிகழ்வே யாகும் 14 வது மகாநாட்டின் "தொடர்புகள் கலாச்சாரம் - சமயம்" எனும் கருப்பொரு ளுக்கு ஏற்றதான நாடும் இந்தியா என்பது அவதானிக்கப் பட்டதும் - உணரப் பட்டது மான உண்மையுமாகும்.

பின்வரும் சில விடயங்களூடாக எமது மதிப்பீட்டினை வழங்குவதற்கு விரும்புகின் றேன்.

## 1. ஒழுங்கமைப்பு - Organization

"UCIP" யின் 14 வது மகாநாட்டுக்கான ஒழுங்கமைப்பில் பிரதானமாக "ICPA" சிறந்த முறையில் இயங்கியிருந்தது பாராட்டுக் குரியது. தங்குமிட வசதி, மகாநாட்டு நிலையம் பயண ஒழுங்குகள் அத்தனையும் மிகச் சிறப் பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மகாநாட்டு நிகழ்வுகளின் போது உரைத் (கட்டுரைத்) தாள்கள் (Talking Papers) ஏனையவை வழங்க டெல்கிப் பல்கலைக்கழக மாணவிகள் தொண் டர்களாக இயங்கியமையையும் நாம் பாராட்டு கிறோம். ஆனால் இலத்தீன் மொழிபெயர்ப்பு ஒழுங்கு செய்யப் படாதது இத்தாலிய சமூகத் தினருக்கு பெரும் குறையாக அமைந்திருந்தது. அத்துடன் மகாநாட்டு நிகழ்வு ஒருங்கிணைப் பாளராக (Floor Co - ordinator) பணிபுரிந் தவர் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் தேவையற்ற விதத்தில் குறுக்கீடு செய்ததையும், பிரதிநிதி களின் மத்தியில் சில அசௌகரியங்களை ஏற் படுத்தியது என்பது குறிப்பிடத் தக்கது.

உணவு ஒழுங்கிலும் சிறு குறைபாடு காணப்பட்டது. உணவின் தரத்தில் – அளவில் (Ouality - Quantity) குறைபாடுகள் அல்ல. மதிய உணவிற்காக ஒழுங்கு படுத்திய இடம் அதிக காலதாமதத்தை ஏற்படுத்தியது என் பது குறிப்பிடத் தக்கது.

## 2. மகாநாட்டு ஆய்வுகள் - நிகழ்வுகள் :-

அதிகமான ஆய்வுரைகள் – ஆசிய நாட்ட வர்களால் வழங்கப்பட்டன. இந்திய, யப்பான் சீன ஆய்வுரைகள் முக்கியத்துவம் பெற்றிருந் தன.

> நேற்று என்பது கண்ட கனவு,
> நாளை என்பது கற்பனை உலகம்.
> இன்று என்பதே உன்வாழ்வுக்கு
> வழிவகுப்பது.

பொது ஒன்று கூடல்களே (General Assembly) அதிகம் இடம் பெற்றன. இதனால் அதிக நாடுகளின் பிரச்சினைகள் - கருத்துக்கள் வெளிவரவில்லை. பிராந்திய ரீதியிலான ஒன்று கூடல்கள் இன்னும் அதிகரிக்கப்படல் வேண் டும். (15 வது மகாநாட்டில் அதிகரிக்கப்படும் என மகாநாட்டுக்குப் பிந்திய மதிப்பீட்டுச் சுற்று நிருபத்தில் செயலாளரினால் அறிவிக்கப் பட்டுள்ளது).

— கலையுலகன் எஸ். லோகநாதன் —

பண்பாட்டுத் திருப்பலி ஒன்று மாத்திரம் இடம் பெற்றது. வேறு எந்த பொதுத் திருப் பலிகளும் இடம் பெறவில்லை. (இதுவும் எதிர் காலத்தில், மகாநாட்டின் ஆரம்பத்தில் நிறை வேற்றப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது).

பொது ஒன்று கூடல்களிலும் கருத்துப் பரிமாறல்களுக்கு போதிய நேரம் ஒதுக்கப் படவில்லை. பொதுவாக ஆசியாக் கண்ட நாடு களின் சிறப்பாக இந்திய, யப்பான், சீன கலாச்சாரங்கள் – தொடர்பு - சமயம் ஆகிய வற்றை அறிய இம் மகாநாடு பேருதவியாக வும், சர்வதேச ரீதியில், கத்தோலிக்க பத்தி ரிகைத் துறை எந்தளவு ஒவ்வொரு நாடுகளி லும் - எப்பேர்ப்பட்ட பணிகளை நிறைவேற்று கிறது என அறியவும் - சர்வதேச பத்திரிகை யாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் கத்தோலிக்க பத்திரிகைத் துறையில் மேலும் புதிய அணுகு முறைகளைக் கையாளவும் 14வது மகாநாடு வழிவகுத்தது என்பது எமது மதிப் பீடாகும்.

மகாநாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தவர்களுக்கும் – வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவிப்பதில் மன மகிழ்ச்சி அடைகின் றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனென்ன கடைச்சரக்கா!

- என். கே. தயாளகுணசீலன் -

பத்திரிகை தொடங்கி
பாராட்டு வாழ்த்தென்று
அத்தனையும் ஓசியென்ருல்
அள்ளுண்டு வருவார்கள்!
செத்தவனைப் பாட
சிந்தனைகளற்றவர்கள்!
நித்தமுமே நம்மவரை
நாடுவதே ஓசியில்தான்!

வீதியிலே கிடக்கின்ற
வேண்டாச் சரக்கென்றே,
நாதியில்லா நம்மவரின்
நல்ல கவிதைகளை
பாரினிலே பறிபோகும்
பண்புதனைப் பார்த்தால்,
காவியங்கள் பேசும்
கவிஞனென்ன கடைச்சரக்கா?

காசு பணமில்லாமல்
காலம் நடக்கிறதா?
வாசி தமக்கென்று
வாங்கும் கவிதைகளும்,
தூசியென நினைத்தால்
துயரம் பெருகாதா?
யோசித்துப் பார்த்தால்
நோட்டம் தெரியவரும்!

தாசியிடத்தில் போய்
தாகம் தணிப்பதற்கும்
காசு விடயமன்றி
காரியம் முடிவதில்லை,
ஆசியுரைகளுக்காய்
அவசரத்தில் என்தமிழை
வீசி விளாசுதற்கு
வேந்தனிவன் வெறுங்கவியா?




# வீரர்

சுதந்திரத்துக் காயிறக்கும் — வீரர்
சொர்க்கத்தில்! நல்லிறைவன் பேரர்!
நிதமிவரின் புகழிந்த
நிலத்திடையில் வாழ்வது மெய்!
உதயத்துக் கிவர்உரித்துக் காரர்.

— நிலாதமிழின்தாசன்.



ஒருவர் : ஆமா... உங்ககூட வேலை செய்த மணி ஏன் விலகி விட்டான்!

மற்றவர் : அவன் இப்போ சவப் பெட்டிக்கடையை திறந்து இருக்கிறன்.

ஒருவர் : ஓ... இப்ப அதுதானே சீசன். பிழைக்கத் தெரிந்த பயல்.

என். யேசுதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

—✶ றெக்ஸ் ✶—

கேள்வி:- 1

கிறிஸ்து கடவுளும்- மனிதனும் ஆனவர் என்று திருச்சபை போதிக்கிறது. மனிதன் குறைவுள்ளவன், பலவீனன், எல்லை உள்ளவன். கடந்தகால உயிர்களில் நின்று தோற்றம் பெற்றவன். இறைவனே எல்லையற்ற முழுமையான பரம் பொருள். இவை இரண்டும் எப்படி ஒன்றாக முடியும். அப்படி ஒன்றானல் எப்படி முழுமையான மனிதனுகவோ, முழுமையான, இறைவனுகவோ இருக்க முடியும்? இரண்டும் இரண்டும் நான்குதான் இது அடிப்படை உண்மை. உண்மைக்கு இறைவனும் விலக்கல்ல. உண்மையே அவன் தானே! கிறிஸ்து கடவுளும் மனிதனும் என்பது உண்மையை இறைவனை மாசுபடுத்துவதாகும் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

செல்வபாரதி, மட்டக்களப்பு

கேள்வி:- 2

அன்னைமரி ஆவியினுல் கர்ப்பம் உற்றிருந்தால் சூசையப்பர் என்னும் பாத்திரத்திற்கு அங்கு என்ன வேலை? சூசையப்பர் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளாரா? அல்லது பொய்யும் புரட்டும் நிறைந்தது தான் பைபிளா? இதற்கு உங்கள் பதில் என்ன?

ஜீவா- கல்முனை,

(இவ்விரு கேள்விகளின் விடயங்களும் ஒன்றையொன்று தழுவி நிற்பதால் இரண்டுக்குமாகச் சேர்த்தே விடையளிக்கப்படுகின்றது.)

பதில்:-நீங்கள் இருவரும் கேட்டுள்ள கேள்விகளுக்கு அறிவியல் / இறையியல் ரீதியாக கூறும் பதில் முழுமையிருக்காது. ஏன் அது அறிவுக்கு முற்றும் பொருந்துவதாயும் இருக்காதென்றே கூறலாம். இறைமகன் யேசுவின் கன்னிப்பேறும், தெய்வீகம் மனிதம் ஒன்றிணைந்த இருப்பும், அறிவினுலல்ல மாருக விசுவாசத்தினுலேயே ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது.

கிறிஸ்தவம் ஆதியிலிருந்தே கன்னியிடமிருந்து பிறந்த இறைமகன் யேசுக்கிறிஸ்துவில் தெய்வீகமும் மனுஷீகமும் ஒன்று சேர்ந்திருந்தது என ஆணித்தரமாகக் கற்பித்து வந்துள்ளது. அப்போஸ்தலர்களும் அவர்களுடைய சீடர்களும் கூட அவ்வாறே போதித்தனர். அந்த அடிப்படையிலேயே கிறிஸ்தவ மதத்தை தழுவியவர்களும் கிறிஸ்துவை விசுவாசித்தனர்.

கன்னிப்பேறும் தெய்வீகம் மானிடம் கலந்த ஆழுமையும் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்படக்கூடிய துணிபுகள் அல்ல. அப்படி அவை நிரூபிக்கப்பட முடியாது என்பதால் அவை உண்மையல்ல என்று கூறுவதும் அறிவுடைமையல்ல. மனிதனில் உள்ள அன்பையும், பாசத்தையும், தியாக மனப்பான்மையையும் அல்லது தீமையைத்தானும் அளக்கவல்ல விஞ்ஞான பௌதிக, இரசாயன அளவைகள் அல்லது கருவிகள் ஏதும் உண்டா? மனித உடலில் உள்ள தசைகளையும், எலும்புகளையும் எண்ணி அவன் இரத்தத்தின் எடையை அளந்து இவை அனைத்தின் கூறுகளையும் பாகங்களையும் கண்டு பிடித்தும் விடலாம். ஆனுல் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் உயிரின் அளவையும் எடையையும் பரிமாணங்களையும் அளக்கும் கருவி எங்கே உள்ளது? அறிவின் எல்லைகளுக்கு வெளியே வியாபித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் இந்தச் சாதாரண மறைபொருட்க ளுக்கே நம்மால் முழுவிளக்கம் அளிக்க முடிவ தில்லை. இனித்திரும்ப முடியாத, ஒப்பும் மிகையும் அற்ற கன்னிப்பேறு போன்ற விசு வாசசத்தியத்திற்கு நம்மால் என்றைக்குமே அறிவுக்கு முழுதும் பொருந்தும் வகையிலோ அன்றேல் அடங்கும் வகையிலோ பதில் அளிக் க முடியாது.

ஆதிக்கிறிஸ்தவர்கள் கன்னிப்பே றையும் இறைமகனின் தெய்வீக மனித இயல்பையும் விளக்கங்களின்றியே விசு வசித்து ஏற்றனர். இவை நிகழமுடியுமா என்பதற்கு அப்போஸ்தலர்களோ அன்றேல் அவர்களது சீடர்களோ தத்துவவிஞ்ஞானச் சான்றுகளுடன் நிரூபிக்கவும் இல்லை. அறிஞ ரான பவுல் (சின்னப்பா) கூட தெய்வீக ஞானம் மனித அறிவுக்கு மடமையாகத்தான் தோன்றும் என்று; அன்று அறிவினுல் அனைத் தையும் விளக்க முற்பட்டவர்களைச் சாடினுர். இதனுல் அறிவை மூட்டை கட்டி வைத்து விட்டு அறிவிலித்தனமாக விசுவசிக்கவேண் டுமென்பதல்ல—அறிவுதான் விசுவாசத்தின் முழு எல்லை என்னும் மடமையான கூற்றை எதிர்ப்பதற்காகவே அவ்வாறு கூறப்பட்டது. பின்னர், மத்திய காலத்தில் மடாலயங்களிலும் இறையியற் கலைக் கழகங்களிலும், விசுவாச சத்தியங்களுக்கு தத்துவவிஞ்ஞான ரீதியான விளக்கங்களும் வியாக்கியானங்களும் அளிக்க முற்பட்ட பொழுதே சச்சரவுகள் தோன்ற வாரம்பித்தன. பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், போன்ற பண்டைய தத்துவ ஞானிகளின் கொள்கைகளுக்கிணங்கவும், அக்காலத்தில் எழுந்த இதர தத்துவங்களின் பின்னணியிலும் விசுவாச சத்தியங்களை விளக்க அல்லது தெளிவிக்க முற்பட்டபோது பிரச்சனைகளும் திருச்சபையில் நிரந்தரமான பிளவுகளும் ஏற் பட்டதை நீங்கள் சரித்திரத்திற் படித்திருப் பீர்கள்.

தத்துவ/விஞ்ஞான விளக்கங்கள் யாவும் விசுவாசசத்தியங்களை ஓரளவு விளங்கிக் கொள்ள உதவும் உத்திகளே அன்றி, அச்சத்தியங்களின் உண்மையை நிரூபிக்கும் சான்றுகள் அல்ல. விளக்கங் களுக்கும், வியாக்கியானங்களுக்கும் கூடச்சத்தியத்தின் அந்தஸ்தை திருச் சபை மத்தியகாலத்தில் கொடுத்த துர திருஷ்டத்தின் அனர்த்த விளைவுகள் தான், வரண்ட நிலத்தின் பிளவுகள் போல கிறிஸ்தவத்தில் இன்று நாம் காணும் கணக்கற்ற கட்சிகள் (சபைகள்)


கன்னிப்பேறும் கிறிஸ்துவின் இரு இயல் புகளும் (உயிர்பபு,புதுமைகள், தூய ஆவியின் வருகை போன்ற விசுவாச சத்தியங்கள் உட் பட இயறகையின் அவசியங்கள் அல்ல அவை இரட்சணியத்தின் அவசியங்கள் என்பது என் தாழ்மையான துணிபு.(They are not exige ncies of Natusc but exgincies of salvation) எனவே ஈடேற்றத்தின், இரட்சணியத்தின், முக்தியின் சூழலில் தான் அவற்றின் தேவை யும உசிதமும விளங்கிக் கொள்ளப்பட முடி யுமேயன்றி இயற்கையின் சட்டத்தால் அல்ல

இயற்கையின் கோலத்தில் (SPHERE OF NATURE) அல்லது அதன் வரம்புக்குள் 'கன்னியிடமிருந்து பிறந்த தெய்வீக மனிதன்' தேவையில்லாதவன், எலியின் கருவில் உதித்த யாளை போல நடைபெற முடியாத முரண் பாடானவன். ஆனுல் இரட்சணியத்தின் (SPHERE OF SALVATION) அல்லது அதன் வரம்புக்குள் ஒரு தெய்வீக மனிதனுல் தான் மனிதனை ஈடேற்ற முடியும் என்னும் அவசி யத்தை உணர்ந்ததனுற்றுன் ஆதிதிருச்சபை அந்த அவசியத்தை சத்தியமாக ஏற்றுக்கொண் டது. அந்த தெய்வீக மனிதன் கன்னியிட மிருந்து பிறப்பதே அவசியமும் உசிதமானதும் என்பதும் அதே சூழலுக்குள் உணரப்பட்ட படியினுற்றுன் கன்னிப்பேறை அதே சத்தியத் திற்காக ஏற்றுக் கொண்டது, இன்றும் ஏற்றுக் கொள்கின்றது. கிறிஸ்துவத்தை மற்ற மறை களிலிருந்து வேறுபடுத்தி அதன் தனித்தன்மை யில் மிளிரவைக்கும் சிறப்பியல்புகளில் இவ்விரு விசுவாச சத்தியங்களும் சேரும். அன்றாட நடைமுறை ரீதியில் அல்லது இயற்கையின் கோலத்தில் மட்டும் இவற்றைப் புரிந்து கொள்ள விழையும் போது நீங்கள் கூறியுள்ள சிக்கல்கள் தோன்றத்தான்செய்யும். விந்தைக் கொடுப்பது மட்டுமே தகப்பனின் கடமையெ னின் சூசையப்பரின் பாத்திரம் தேவையற்றது தான் அல்லது நடக்க முடியாத ஒன்றுக்குச் சாட்சியம் கூறக்கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு அப்பாவிக் கிழவன் தான். தெய்வீக மனிதனும் ஒரு பூதம் தான்.

இயற்கையின் ரீதியில், இவ்விரு விசுவாச சத்தியங்களுக்கு மட்டுமல்ல, இறைமகன் யேசு வின் புதுமைகள் உயிர்ப்புப் போன்ற மறை பொருட்களைக் கூட முரண்பாடுகளின்றி விளங் கிக் கொள்ளவே முடியாது. இறைவன் யேசுவின் ஒப்பும், மிகையும் அற்ற தனி தன்மையை **(Incomparaple Uuiquenesz)** நிலைநாட்ட; இரட்சணியத்தின் வரம்பு களுக்குள் மட்டும் முழுமையாகவும், அவசியமாகவும், பயன்படும் விசுவாச சத்தியங்கள் இவை என்று நான் கூறு வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை - இந்திய நெருக்கடிகள்

— ஓர் அரசியல் கண்ணோட்டம் —

✦ மலர்வேந்தன் ✦

இந்திய விமானங்களின் ஊடுருவல் இலங்கையில் தொடர்பு சாதனங்களுக்கு அவலாய் வாய்த்திருக்கிறது. எந்நேரமும் விமான அத்துமீறல் பற்றிய கடுமையான விமர்சனங்கள் காதை நிறைத்துக்கொண்டிருக்கின்றன. இலங்கையின் இறைமையை மீறிய செயல் என்றும், சர்வதேச சட்டங்களுக்கு அவமதிப்பு என்றும், இராணுவ தலையீட்டுக்கு ஒத்திகை என்றும் ஏதேதோ பேசப்படுகின்றன. இந்த ஆவேசப் பிரச்சாரத்தில் வட புறத்து மக்களின் கண்ணீரும், அங்கு நடைபெற்ற கொடூரங்களும், அவலங்களும் அனைத்துமே மறக்கப்படுகின்றன. இல்லை மறைக்கப்படுகின்றன.

உண்மையில் விமான ஊடுருவல் இந்தியாவே எதிர்பார்க்காத ஒன்றுதான். அடிபட்டு வீழ்ந்து கிடப்பவனுக்கு உதவிசெய்ய அடிப்பவனிடம் கொடுக்கவேண்டும் என்று சொல்வது - அதற்கு சர்வதேச சட்டங்களைத் துணைக்கழைப்பது வேடிக்கையானதுதான் இதனால் ஏற்பட்ட மோதல் கௌரவப் பிரச்சினையாகி விமான உருவில் வந்துவிட்டது.

இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு நீண்டகாலமாகவே தமிழ் மக்களிடம் உண்டு. இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கும் என்ற அச்சம் சிங்கள மக்களிடமும் உண்டு. இப்போது இந்தியாவின் நிவாரண உதவி முயற்சி அச்சத்தை அதிகப்படுத்திவிட்டது. இந்த இக்கட்டான நிலைக்கு இலங்கை அரசின் இறுமாப்பே காரணமாகும். இரண்டாங்கட்ட நிவாரண உதவிக்கு இந்தியக் கப்பல்கள் காங்கேசன்துறைக்கு வந்து பொருட்களை இறக்கவும், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து பொருட்களை விநியோகிக்கவும் சம்மதித்துள்ள அரசு ஏற்கனவே இந்த விட்டுக்கொடுத்தல் மனப்பான்மையைக் காட்டியிருந்தால் பல சிக்கல்களைத் தவிர்திருக்கலாம். பதற்ற நிலையை தடுத்திருக்கலாம். நம்மவர்க்கு ஏற்படும் காலங்கடந்த ஞானோதயங்களால் எமது நாட்டுப் பிரச்சினைகளில் முடிச்சுகள் மேல் முடிச்சுகளாய் விழுந்து நிலைமை மோசமாகின்றன.

பலரும் அஞ்சுவதுபோல் - அல்லது சிலர் எதிர்பார்ப்பது போல் இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கும் என்ற எண்ணம் எமக்கு இல்லை. அதற்கான வாய்ப்புக்கள், சூழ்நிலைகள் அருகியே காணப்படுகின்றன. இந்திய அரசாங்கமும் அடிக்கடி இதை வலியுறுத்தி வந்துள்ளது.

இலங்கை பங்காளதேஷ் அல்ல. இலங்கை பிளவுபடுவ

> நாம் செய்கின்ற தவறுகளையும், குற்றங்களையும் ஆணித்தரமாக அப்படியே பிரதிபலிக்கக் கூடிய நண்பன் நம்முள்ளே நிலவுகின்ற மனச்சான்றே.
>
> — கிரேக்க அறிஞர் சோவொகிளஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் இந்தியாவுக்கு பெரிய அரசியல் இலாபம் எதுவும் கிடைத்துவிடாது. மாறாக எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படவே வாய்ப்புண்டு. பகை நாடான பாகிஸ்தானை துண்டாடி பங்காளதேஷை உருவாக்கியதன் மூலம் பாகிஸ்தான் பலவீனப்பட்டது. இதில் இந்தியாவின் பாதுகாப்புக்கு இலாபம் உண்டு. ஆனால் இலங்கை இந்தியாவின் பகை நாடல்ல, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய பலம் பொருந்திய நாடுமல்ல, ஒன்றரைக்கோடி மக்களைக்கொண்ட ஒரு குட்டித்தீவு இது. இதனோடு இந்தியா நேரடி மோதலில் ஈடுபட்டால் அதன்மூலம் இலங்கை பிளவுபட்டால் இந்தியாவின் இராணுவ பலத்துக்கு ஈடுகொடுக்க முடியாத இலங்கை அரசு நிச்சயம் ஒரு வல்லரசின் பக்கம் வெளிப்படையாக — நிரந்தரமாகச் சாயவேண்டி ஏற்படும். அது அமெரிக்காவாகத்தானிருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. இது இந்தியாவின் தென் பகுதிப் பாதுகாப்புக்கு பெருத்த அச்சுறுத்தலாயிருக்கும். ஏற்கனவே இந்திய வடபகுதியில் சீன, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் எல்லைகளில் பிரச்சினைகளை எதிர்நோக்கி, கோடிக்கணக்கில் பணத்தை கொட்டி பாதுகாப்பை பலப்படுத்தியிருக்கும் இந்திய அரசு, இதுவரை பிரச்சினையற்றிருந்த தென்பகுதிக் கடலோரத்தையும் பிரச்சனைக்குரியதாக்கி - பாதுகாப்புக்கு பணத்தைக் கொட்ட விரும்பாது. இது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இந்தியாவைப் பாதிக்கும். நிரந்தரமான அமைதிக் குறைவுக்கும், வல்லரசுகளின் நடமாட்டத்துக்குமே வழிஅமைக்கும். இது இந்து சமுத்திர பிராந்தியத்துக்கே ஒரு தலையிடியாக அமையும். இருபது இலட்சம் இலங்கைத் தமிழரைப் பாதுகாக்க இந்தியா தனது எழுபது கோடி மக்களின் பாதுகாப்பையும், தேசிய நலனையும் பணயம் வைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளையில் இலங்கை, இந்தியாவின் பகை நாடுகளுடன் கொண்டுள்ள நெருங்கிய உறவும், இலங்கைத் தலைவர்களின் பொறுப்பற்ற குரோதப் பேச்சுக்களும் அவமதிப்புகளும் இந்தியாவை ஆத்திரமடைய வைத்துள்ளன. அத்துடன் அகதிகள் பிரச்சினையும், ஐந்து கோடி தமிழ் மக்களைக் கொண்ட தமிழ் நாட்டின் உணர்வலைகளையும் இந்தியா எதிர்நோக்கவேண்டியுள்ளது. இலங்கை இறைமையுள்ள ஒரு தனி நாடாகையால் சர்வதேச சமுதாயத்தின் முன் இந்தியா தனது கரங்களின் சுத்தத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு காட்டவேண்டிய கடப்பாடுகளையும் கொண்டுள்ளது இந்நிலையில் இலங்கைப் பிரச்சினையை இந்திய இராஜதந்திரம் எவ்வாறு கையாளப் போகிறது என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


## எதிர்பாருங்கள் !

இவ்வாண்டின் இணையற்ற சாதனையாய் கருத்துக் கருவூலங்களை நிறைத்துக்கொண்டு இலக்கியச் சிறப்பிதழாய் 'தொண்டன்' இனிது வரவிருக்கிறான்.

- இந்திய இலங்கை அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்.
- விமர்சனங்கள், பேட்டி, சிறுகதைப் போட்டி முடிவுகள்.
- விவிலியத்தின் இலக்கியச் சுவைகள்.
- கவிதைகள், செய்திகள் இன்னும்பல சிறப்பிதழைச் சிறப்பிக்க உங்களுக்கும் உரிமை உண்டு. உடனே எழுதுங்கள்! அனுப்ப வேண்டிய இறுதி நாள் ஜுலை 30.

முகவரி:

**தொண்டன் இலக்கியச் சிறப்பிதழ்**

சமூகத் தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒரு நிமிடம்

நகரத்தின் பிரதான வீதிகள் நான்கு சந்திக்கும் இடம். தார் ரோட்டில் குறுக்கே பனம் குற்றி ஒன்றைப் போட்டது போல் ஒரு ஸ்பீட் பம்ப் (Speed bump). பொலிஸ் இலாகா அருகே இருப்பதனால், தீவிரவாதிகள் வந்து தீங்கிழைத்து விட்டு தப்பித்து விடக் கூடாதே என்ற மரணப்பயத்திற் போடப் பட்ட வேகத்தடை அது.

அன்று காலை ஏறத்தாழ 10 மணியிருக்கும். வழக்கமாகவே சந்தைக்கும், அங்காடிக்கும் போய் வந்து கொண்டிருக்கும் சனநெருக்கடி. அதைவிட வெளியில் இருந்து வந்து திருவிழாவோ அல்லது ஊர்வலத்தையோ பார்க்கக் கூடி நிற்பது போன்றதொரு சனக் கூட்டம் (கூடிய தொகையிற் பெண்கள்) வேகத் தடையுள்ள இருமருங்கிலும் மோவாயிற் கைவைத்தபடியும், கைகட்டியும் நிற்பதைக் கண்டேன்.

ஏனிந்தக் கூட்டம் என்று ஒரு கேள்வி மனத்தில் ஒரு நொடியில் எழுந்தது. மறு வினாடி ஏதோவொரு சாதாரணமான விடயமாயிருக்கும் என்று தட்டிவிட்டு கடையொன்றினுட் புகுந்தேன்.

திடீரென்று பெரும் ஓலங்கள் "என்ர மகனே......" "என்ர ராசாவே......" "ஐயோ அவரையும் கொண்டு போறாங்களே......" "அம்மா...... அப்பா" திடுக்குற்று வெளியே ஓடிவந்து பார்த்தேன். ஒரு ஜீப் நிறைய படை வீரர்கள். அதன்பின்னே ஒரு இ.போ.ச. பஸ் நிறைய இளைஞர்களும் அவர்களிடையே போர் வீரர்களும், அதற்குப்பின்னே இன்னுமொரு ஜீப் நிறைய ஜவான்கள்.

வேகத்தடையருகே வந்துவிட்ட வாகனங்கள் அதன் மீது ஏறிச்செல்ல வேண்டியதனால் தரித்துவிட்ட அந்த ஒரு நிமிடத்தில் ஒரு யுகத்தின் அனுபவம் அங்கு நடைபெற்றது. கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட இளைஞர்கள், "பொடியன்கள்", போராளிகள், அப்பாவிகள் முதலியோரை "பூஸா"விற்கு கடத்திக் கொண்டிருந்த அந்தப் பேருந்திற் குள்ளிருந்து "அம்மா, அப்பா...... பிள்ளை போயிற்றுவாரன் என்று கவலையுடன் கைகாட்டிய முகங்கள், புன்னகையுடன் கைகளை ஆட்டி "வீட்ட சொல்லுங்க" என விடைபெற்ற மீசையும், தாடியும், தலைமயிரும் மண்டிய முகங்கள்.

உற்றார், உறவினரின் ஓலங்களையும் கைதிகளின் கோஷங்களையும் கேட்டு மலைப்பால் வாயைப் பிளந்தனர் படை வீரர் சிலர். இறுகிய முகங்களிலும் ஓடிய அந்தக் கோடுகள் அனுதாபத்தின் அடையாளமா அல்லது ஏளனத்தின் எகத்தாளமா என நான் அளந்து கொள்வதற்கு முன்பாகவே இ. போ. ச. வேகத்தடையை ஏறிமிதித்து இனிப்போகா விட்டால் சங்கடம் தான் என்று ஓடிப்போய் விட்டது. ஓலங்களும் ஓய்ந்து விட்டன. அந்த ஒரு நிமிடம் தான்! அடுத்த நிமிடம் இதற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை: அப்படியொன்று நடைபெறவேயில்லை என்னும் அளவுக்குச் அச் சூழல் மாமூலாகிவிட்டது. என்மனதில் ஒரு உண்மை பளிச்சிட்டது. சாவும், சிறையும் இன்றைய இலங்கைத் தமிழினத்திற்கு மாமூலாகவே மாறிவிட்டது. செத்தவனுக்குச் சடங்குக்காகச் சபையில் செலவிடப்படும் இரு நிமிடமௌன அஞ்சலி போல; செத்தவனுக்கும், சிறைப்பட்டவனுக்கும், சித்திரவதைப் படுபவனுக்கும் மனதில் எழும் ஒரு "தசுச்சு..." ஒரு "ஐயோ பாவம்"...", ஒரு "ம்... கடவுளே!...", "...என்ன கறுமம்", என்று அங்கலாய்ப்பதோடு துக்கச் சடங்கை முடித்துக் கொண்டு; "என் தலை தப்பியது தம்பிரானே உன் புண்ணியம்" என்று பரிசேயத்தனமாகப் பிரார்த்தித்துக் கொண்டு; நம் அன்றாடம் காய்ச்சித்தனமான வாழ்வுக்கு அவசர அவசரமாக அலுவல்களைப் பார்ப்பதே இன்று வழக்கமாகி விட்டதல்லவா? "சூச்சூ" கொட்டுவதால் நமக்கு சுபீட்சம் பிறந்து விடுமா? அனுதாபப்படுவதால் மட்டும் அதர்மங்களை அழித்து விட முடியுமா??

—(ரூபேஷ் ஜோசப்)-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினமாகத் தென்படுகின்றனர் போலும். அரசியலின் அதிகார வரம்புகளே பெரும்பாலும் அவர்களை ஆத்திரக் காரர்களாக்குகின்றன. ஆனால் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நாட்டின் உயர்கல்வித் துறையைப் பலியிட நினைப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

உயர்கல்வி நிறுவனங்களின் உள்வீட்டுப் பிரச்சினைகளில் காவல்துறையினரை ஒரு தீர்வுக்கருவியாகப் பயன்படுத்துவது எத்தனை முட்டாள் தனமானதென்பதை கடந்தகாலங்களிலே ஏற்பட்டுள்ள அநியாயச்சாவுகள் தெளிவுபடுத்துகின்றன. ஒரு உயர்கல்வித்துறை மாணவனை நோக்கி ஆயுதத்தை நீட்டும் ஒவ்வொருவரும் நாட்டின் எதிர்காலக் கல்விக் கட்டடத்தின் ஒவ்வொரு கருங்கல்லை இடித்து வீழ்த்துவதை உணரவேண்டும். சந்தேகத்தின் பேரில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் போதும் ஒரு ஐ ஆர் சிக்கு ஒரு உயர்கல்வித் துறை மாணவனுக்கும் இடையிலான வித்தியாசத்தை காவல் துறையினர் கவனிக்க வேண்டும்.

பொறுப்பான அதிகாரத்திலுள்ள அரசியற் தலைவர்கள் ஏற்பட்ட பிரச்சினையின் ஆணிவேரை கண்டுபிடித்து பரிகாரம் காண முற்படவேண்டும். மூடுவிழாக்களின் ஊடேயான தற்காலிக பூசி மெழுகல்களும் பிறவும் எதிர்காலத்தில் நாட்டின் கல்வித்துறையில் கடும் பின்னடைவுகளை ஏற்படுத்தும் என்பதனை ஆளும் வர்க்கத்தினர் உணர்ந்து செயற்பட வேண்டும். செய்வார்களா?

மாகோ ஈஸ்வர புத்திரன்
பேராதனைப் பல்கலைக் கழகம்

---



"யார் ராசா அந்தப் பெண் .. நீ பார்த்துப் போட்டியா... இல்ல நான் பார்க்கட்டுமா... சோமநாதரின்ட வீட்டில கூட கேட்டாங்க அவங்கட மகளுக்கு... வீடு வளவு சீதனம் எல்லாம் கொடுப்பாங்க... நல்ல மாப்பிள்ளை இந்த நாளில எடுக்கிற கஷ்டம்" என்று இழுத்தாள் அம்மா.

"நான் இப்ப பார்த்துப் போட்டுத்தான் அம்மாவாறன் ஆனா நீதான் போய் அவளின்ட சம்மதத்தை கேட்க வேணும்".

"யார் எவள் என்று சொல்லாம சுற்றி வளைக்கிறியே... யார் என்று சொல்லன்"

"மேகலை" என்றான் கணபதி.

"யார்? அந்த தாலி அறுந்தவளா. ஒரு சதத்திற்கு கூட வக்கற்ற நிலையில இரண்டு வால்களுடன் நிக்கிறாள். அவள் அவன் கனகன்ட வைப்பாட்டியே. உனக்கு தலையில கோளாறு? நான் என்ன மானம் மரியாதை கெட்டுப் போய்யா இருக்கிறன். அவள் வீட்டில போய் அவளை இந்த வீட்டுக்கு மருமகளாக கேக்க?" பொரிந்து விழுந்தாள் அம்மா.

சற்று நேரம் அம்மாவையே மெல்ல உற்றுப் பார்த்து விட்டு கணபதி கூறினான். "இன்று இந்த நாட்டில 'மானம்' 'மானம்' என்று தான் இவ்வளவும் நடக்குது. எங்கட மானம் மரியாதையை நிலைநாட்டுவம் என்று தான் பொடியன்கள் ஆயுதம் எடுத்து சண்டை போடுகிறான்கள். எத்தனையோ உயிர் இந்த 'மானத்திற்காக' செத்துப் போச்சு. மேகலையும் மானம் மரியாதையோடு வாழ்ந்த குடும்பப் பெண் தான். விதி அவள் வாழ்க்கையில விளையாடிச்சு. கனகன் சூழ்நிலையை பயன்படுத்தி வாழ்கின்றான். பணம் இருக்கு அவனுக்கு. அதனால மானமும் இருக்கு. மேகலையிட்ட பணம் இல்ல. அதனால மானம் கூட இல்ல. கனகன் வீட்டுக்கு நீ வேண்டும் என்டா போவா சிலவேளை பெண் கேட்டுக் கூட போவா. மேகலையிட்ட போக "எனக்கு என்ன மானம் மரியாதை இல்லையா "என்று கேக்கிறா"

கணபதியின் எதிர்பாரத அறிவுரையினால் திக்குமுக்காடிப் போனாள் அவன் தாய். ஏதோ எல்லாம் கூற எண்ணிய அந்த உள்ளத்தில் இருந்து வார்த்தைகள் வர முடியாமல் தடுமாறின. உண்மையிலே மகன் கூறியது சரிதான் என்ற உணர்வு; சத்தியத்தின் வார்த்தைகள் அவள் மனதையும் ஊடுருவியது.

"நான் உன்ன பெத்து வளர்த்தவள் தாண்டா, கணபதி உன்ன முற்றாக புரிந்து கொண்டவள் என்று தான் இது வரையும் நினைச்சன். இப்பதான் தெரியுது எண்ட பிழை. வாழ்க்கையிலே ஏற்பட்ட அனுபவம் உன்னையும் உண்ட சிந்தனையையும் எப்படி மாற்றிப் போட்டுது என்பது இப்பதான் புரியுது. நீ கூறிய 'மானம், மரியாதை என்று இப்பதான் எனக்கும் அது புரியுது. அனுபவத்தில் நானும் படிச்சிட்டன் வாழ்க்கைப் பாடம், போறண்டா, மகனே! உனக்கு பெண் கேட்கப்போறன். அவளுடைய துகில் உரிய விடமாட்டன்" என்று கூறியவளாக அந்த தாய் கூனிய முதுகை நிமிர்த்தியபடி வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைக்கச் சில துளிகள்

## நீயாகவே தெரியும்

ஒரு சமயம் பாரசீகக் கவிஞர் ஜாமி ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஆண்டவனை நோக்கிக் கூறும் பாவனையில் 'என் நெஞ்சமெல்லாம் நீயே நிறைந்திருக்கிறாய் அதனால் என் பார்வைக்குப் படுவதெல்லாம் நீயாகவே தெரிகிறது' என்றார். இடையில் திடீரென்று ஒருவன் எழுந்து 'உங்கள் முன்னால் ஒரு கழுதை தோன்றினால் அது எப்படித் தெரியும்? என்று கிண்டலாகக் கேட்டான்.

'அது நீயாகவே தெரியும்' என்று பதிலடி கொடுத்தார் ஜாமி.

## பிளீஸ்....

புகழ்பெற்ற எழுத்தாளர் டால்ஸ்டாய் ரயில் நிலையம் ஒன்றில் அனாதையாக இறந்தார். அப்போது அவரது சட்டைப் பையில் சிறிய காகிதம் ஒன்று இருந்தது. அதிலிருந்த குறிப்பு:

''தயவுசெய்து என் பிணத்தைஎன் மனைவியிடம் ஒப்படைக்காதீர்கள்''.

## கோயிலினுள் மாடு
### (உண்மை நிகழ்ச்சி)

பங்குக்குரு: ஏம்பா அருளு, மாட்டக் கொண்டு போய் கோயில்ல கட்டுறியே... இது ஞாயமாப்பா?

அருள் : ஏன் சாமி, யேசுநாத சாமியே மாட்டுக் கொட்டகையிலதானே பொறந்தாரு. நீங்க என்னண்ணு ஏன் கட்டுறுன்னு கேக்குறீங்க. அவருக்கு இடம் கொடுத்த இந்த மாட்ட அவரு கோயில்ல கட்டுறது தப்பா சாமி?

பங்குக்குரு? ...?...?...

(தமிழ் நாட்டில் நடந்தது)

## உண்மை நண்பர்கள்


சோக்கிரட்டீஸ் தனக்கென்று புதுவீடு ஒன்றைக் கட்டத் திட்டமிட்டார். பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவரோ மிகவும் புகழ்பெற்ற அறிஞர். மிகப் பிரமாதமாக வீடுகட்டப் போகிறார் என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ மிகச்சிறிய வீட்டை எளிய முறையில் அமைத்தபோது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஒருவர் கேட்டார்.

'இவ்வளவு புகழ்பெற்ற நீங்கள் இப்படி சின்ன வீடாகக் கட்டிவிட்டீர்களே; ஏன்?

சோக்கிரட்டீஸ் கூறினார் 'அதனாலென்ன, இந்த வீட்டிற்கு எனது உண்மையான நண்பர்கள் மட்டும் வந்தால் போதுமென்று நான் கருதுகிறேன்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திறவுங்கள்

உலகமெங்கும் இல்லாதோர் உண்டு; மறக்கவேண்டாம்; உங்கள் இல்லங்களில் அன்றுடம் நல்விருந்துகள்; ஆனுல் உலகின் மூலைமுடுக்கெல்லாம் ஏழைகளின் பட்டினிக் கோலங்கள்; உங்கள் விருந்துக் கூடங்களின் கதவுகள் திறந்திருக்கட்டும். உறவுக்காரர்களுக்காக அல்ல! உள்ளம் ஒடிந்துபோன வறியவர்களுக்காக!

(1979ல் அமெரிக்க மக்களுக்கு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறியது)

## எபிரேயத்தில் அரிமா

தமிழில் அரிமா என்று சொன்னுல் சிங்கம் என்று பொருள் கொள்ளுகின்ருேம் விவிலியத்தில் இச்சொல் பல இடங்களில் கையாளப்படுகின்றது சவுலும், ஜோனத்தாசும் சிங்கம் போன்று பலம் பொருந்தியவர்கள் என்று சொல்லப்படுகின்றது. குறிப்பிடத்தக்கது என்னவென்ருல் அரி என்ற தமிழ்ச் சொல் எபிரேயத்திலும் சிங்கத்தைக் குறிக்கப் பயன்படுகின்றது. எபிரேயத்திலும் அரி என்ருல் சிங்கமே!

## உண்மையான மரியாளை அறிமுகப்படுத்தவேண்டும்

கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று மாதாபக்தி. 2ம். வத்திக்கான் சங்கம் அப்பக்திக்கு இறையியல் ஆதாரம் தருகிறது.

வழிதவறிப்போன பக்திக் கண்ணோட்டத்தில் மரியாளை ஏதோ ஒரு சிமாட்டியைப்போல படம்பிடித்து வைத்திருக்கிறோம். வேலை செய்தறியாத பணக்காரியைப் போலவும், உலகத் தொடர்பற்று என்றும் பரவசத்தில் மூழ்கிய பெண்ணைப் போலவும் அவளைச் சித்தரிப்பது வரலாற்றையே திரித்துக் கூறுவதாகும்.

எது கிறிஸ்தவம் என்ற கேள்விக்கு பூரண பதில் மரியாள்தான். கிறிஸ்துவை எலிசபெத்திடம் ஏந்திச் செல்லும் இளம் பெண் இறைபுகழ் பாடும்போது சமுதாய மாற்றங்களைச் சுட்டிக் காட்டுகிருள். இரக்க உணர்வுகள் மட்டுமன்று கலாச்சார, அரசியல், பொருளாதாரப் புரட்சிகளும் சேர்ந்துதான் இறைபுகழ் பாடவேண்டும் என்பதை நற்செய்தியென பறை சாற்றுகிருர். நற்செய்தியை நடைமுறைச் செய்தியாக மலரச் செய்வதே நிஜக் கிறிஸ்தவம்.

அ. ம. வரப்பிரசாதம் யே. ச

## பெரிய பைபிள்

உலகிலே பெரிய பைபிள் ஒன்றை லொஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) நகரைச் சேர்ந்த ஒரு தச்சுத் தொழிலாளி மரத்தால் செய்துள்ளார். இதை இரண்டு ஆண்டுகள் இரவு பகலாக உழைத்துத் தயாரித்துள்ளர். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் மரத்தால் செய்து எழுத்துக்களைப் பொறித்துள்ளார். அதன் உயரம் $3\frac{1}{2}$ அடி. அகலம் 8·2 அடி. அதில் 8048 பக்கங்கள் உள்ளன. அதன் எடை 3206 இருத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்

### செ. குணரெத்தினம்

## அத்தியாயம் 18

ஆனந்தனின் மீன் வாடி தீப்பிடித்து முற்றாகத் எரிந்து சாம்பலாக போய் விட்டது

எப்படி வாடியில் தீப்பிடித்துக் கொண்டது. யார் அதற்குத்தீயை மூட்டினுர்கள் என்று எவருக்குமே தெரியவில்லை.

இனக்கலவரம் எழுந்து, தமிழ்மக்களெல்லாம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவந்து அகதிகளாக இருந்த வேளையில் ஆனந்தன் தன்சக் நண்பர்களைத் திரட்டிக் கொண்டு உணவும், உடையும் வீடு வீடாகச் சென்று சேகரிது உதவியதால் உயர்மட்டத்திலுள்ள சிலருக்கு ஆனந்தனின்மேல் கறுப்பு இருந்தது அந்தக் கறுப்புத்தான் நெருப்பானதோ ! என்றகதை ஊருக்குள் அடிபட்டு நெருப்புப்பற்றி எரிந்து வாடி சாம்பலானதை போலவே அந்தக் கதையும் மறைந்து விட்டது.

எப்படியோ ஆனந்தனுக்கு நட்டம் நட்டம்தான். எல்லாம் ஆண்டவன் செயல் என்று ஆனந்தன் ஆறுதல் அடைந்தாலும், சின்னவனும் ஆனந்தனின் தம்பி ராமுவும் அவனைப்போல சட்டெனை ஆறுதலடைய முடியாமல் ''வாடிக்கு நெருப்பு வச்சவனை யாரென்று கண்டு பிடிச்சி, செவ்வைக்குச் செவ்வை கொடுக்காமல் விடப் போறதில்லை'' என்று உறுமித் திரிந்தார்கள். என்றுலும் எவரையும், எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

வெளியே கவலைகளைக் காட்டாமலிருந்தாலும் நெஞ்சுக்குள்ளே ஆனந்தனுக்கு கவலைக்கொடி அவனையறியாமல் படரத்தான் செய்தது.

போட்டிலிருந்து வலையை இறக்காமல் அப்படியே வைத்திருந்ததால் தொழிலுக்கு பங்கம் ஏற்படவில்லை. என்றுலும் மீன் வாங்கிய கணக்கு வழக்குகள் அடங்கிய கொப்பிகள் பெட்டிகள், இன்னும் சில தேவையான வலைத்துண்டுகள் கயிறுகள் எல்லாமே எரிந்து போய் விட்டன.

சகுனங்களை எல்லாம் நம்பாத ஆனந்தனையே மீன் வாடி எரிந்தது கூடாத சகுனமென்று எண்ண வைத்துக் கலக்கிறது.

மீனைக் கொடுத்தவர்கள் ஆனந்தனிடம் வந்து கணக்கு கொப்பிகள் எரிந்ததைப் பற்றிக் கவலைப்படவேண்டாம் நாங்கள் உன்னிடம் தந்த மீனுக்குரிய கணக்குகளையும், வாங்கிய பணத்துக்குரியகணக்குகளையும் நாங்களும் குறித்துக் குறித்து வைத்திருக்கிறேம். அதனுல் நீ பயப்படத் தேவையில்லை.'' என்று சொன்னது அவனுக்கு ஓரளவு ஆறுதலை அளித்தது.

மீன்வாடி எரிந்த நிகழ்வின்பின் ஆனந்தனின்மனநிலை சரி நிலைக்கு வர கிட்டத்தட்ட ஒரு மாதம் பிடித்தது.

இந்த இக்கட்டான பிரச்சினைக்கு மத்தியில் வாழைச்சேனை கடதாசி ஆலையில் டைபிஸ்ராக வேலை பார்க்கும் ராணியும், அங்கே எழுதுவினைஞனுகவிருக்கும் மூர்த்தியும் காதல்கடிதம் பரிமாறிக் கொண்ட கதைகளும், ரகசியமாக பாசிக்குடா, சினிமா என்று போய்த் திரியும் சம்பவங்களும் கதை கதையாக அள்ளுப்பட்டு வந்து ஆனந்தனின் காதுக்குள் புகுந்து கொண்டன.

இவைகளையெல்லாம் பார்க்கக் கூடாதென்றே என்னவோ வீரகத்தியரும் வாடிக்குத் தீப்பிடித்து இரண்டாம் மாதமே மாரடைப்பால் மண்டையைப் போட்டு விட்டார்.

அடாவடித்தனமாகச் செலவு செய்யாமல் வங்கியில் கொஞ்ச நஞ்சம் போட்டுவைத்திருந்ததால் ஆனந்தன் ஒருவாறு ராணி—மூர்த்தி இருவரையும் சேர்த்து வைக்கவும் வீரகத்தியின் மரணச் சடங்கை செய்து முடிக்கவும், மீண்டும் வாடியை புதிதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய எழுத்தாளர்களே!
எழுந்து வாருங்கள்!!

## சிறுகதைப் பயிற்சி அரங்கு

- சிறுகதை என்றால் என்ன?
- சிறுகதை எழுதுவது எப்படி?
- இதுதான் சிறுகதை?
- அனுபவம் மிக்க எழுத்தாளர்கள் நடத்துகிறார்கள்.

நாள்: 20-08-87

நேரம்: காலை 8-30 முதல் மாலை 4.30 வரை

— பங்குபற்ற விரும்புவோர், சிறுகதை பற்றிய தமது அனுபவங்களை குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குனர் - சிறுகதைப் பயிற்சி அரங்கு**
சமூகத்தொடர்பு நிலையம்,
ஆயரகம் - மட்டக்களப்பு.

— குறிப்பிட்ட எண்ணிக்கையினரே அனுமதிக்கப்படுவர். ஆகவே முந்துங்கள்.

கட்டி ஒப்பேறவும், வசதியாகவும் இருந்தது. என்றாலும் மீன்பிடித்தொழில் வழமை போல் இல்லாமல் வரவர மந்த நிலையில் போய்க்கொண்டிருந்தது. தங்கைகளை அவர்கள் விருப்பப்படி வாழவைத்ததில் ஆனந்தன் நிறைவு கண்டாலும் தனக்கும் தன் தம்பி ராமுவுக்கும் ஒரு நிரந்தரத் தொழில் இல்லையே என்ற ஏக்கம் அவனுக்கு இல்லாமலில்லை.

இளையவள் ராணி வேலைக்குப் போறதுக்கு வசதியாக கணவன் மூர்த்தியோடு வாழைச்சேனையிலேயே வீடெடுத்து இருந்து கொண்டாள். மூத்தவள் தாயாகி வீட்டிலேயே கணவன் பிள்ளைகளோடு வாழ்ந்தாள். ஆனந்தன் அதே கிராமத்தில் கொஞ்சம் தூரத்தில் ஜெயந்தியோடு குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

ராமு வேலையொன்றுமில்லாமல் அக்காவின் வீட்டிலேயே வாழ்ந்தாலும், அவனுக்கு தன்சுய உழைப்பில் சீவித்து தனியாக வாழவேண்டுமென்ற எண்ணம் பிடித்தது. ஆனால் அவன் படித்த படிப்புக்குத் தான் வேலை வந்து கைகூடவில்லை.

அண்ணன் ஆனந்தன் வாடியில் இல்லாத சமயங்களில் தனியாக குந்திக்கொண்டு ராமு எதையாவது யோசிப்பதில் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தான். தொழில் முன்போல நடவாததால் ஆனந்தன் குடும்பம் நடாத்தக் கஷ்டப்படுவதைஎண்ணிப் பார்த்தபோது அவனுக்கு வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது.

அவர்களோடு கூடப் பிறந்த சித்ராவும், ராணியும் ஏதாவது நல்லநாள் பெருநாளுக்கு அண்ணன் வீட்டுக்கு போய் உலக ஒப்பனைக்காகப் பேசி மகிழ்ந்து விட்டு வருவதோடுசரி அதன் பிறகு அண்ணனைப் பற்றிய நினைவேயில்லாமல் தங்கள் குடும்பம் பிள்ளைகள் என்று வாழ்வதை ராமு அவதானித்த போது அவனுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

எங்களையெல்லாம் ஒரளவிற்கு இந்த நிலைக்குக் கொண்டு வந்தவன் அண்ணன் தான் என்பதை இவர்களெல்லாம் எண்ணிக்கூடப் பார்க்கிறார்களில்லையே. பந்தபாசமெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்குத்தானு! பெற்றவர்களோடு அண்ணன், தம்பி அக்கா, தங்கையென்று முறை சொல்லி மகிழ்ந்தவர்களெல்லாம் இன்று திக்குத்திசை தெரியாமல் சிதறி வாழ்ந்து பழைய உறவுகளை — பாசங்களை மறந்து திரிகிறார்களே! சே!, இந்த உலக வாழ்க்கை போலிவாழ்க்கை என்பது உண்மைதான்.

அம்மா, அப்பாவுக்குத் தான் என்னால் உழைத்துப் போடமுடியவில்லை. அண்ணனுக்காவது அவன் செய்த புண்ணியத்துக்காக என்னால் உழைத்துப் போடமுடியாதா! என்கூட 'கம்பசில்' ஒன்றாய் படித்த என் கிராமத்துப் பையன்களெல்லாம் இன்று பெரியபெரிய உத்தியோகங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் அமர்ந்திருக்க நான் மாத்திரம் ........ அவர்களுக்கு கை கால் ஏன் வால் கூடப் பிடிக்கத் தெரியும்! எனக்குத்தான் அது தெரியாதே! அப்பாவின் பிடிவாதமும், உண்மை நேர்மையில் அவருக்கிருந்த வைராக்கியமும் அப்படியே எனக்கும், அண்ணனுக்கும் இரத்தத்தில் ஊறி விட்டதனுல் தான் இந்த நிலையா!''

கையிலிருந்த அன்றையத் தினசரி வழுக்கி விழுந்தது கூடத் தெரியாமல் சிந்தையில் ஆழ்ந்திருந்த ராமுவின் பக்கம் சின்னவன் வந்துநின்று 'ராமு' என்றுன்.

அப்போதுதான் சுயநினைவு வந்தவனுக ராமு 'அடே சின்னண்ணனு!' என்றபடி எழுந்தான்.

'ராமு உனக்கு விசயம் தெரியாதா ஆனந்தண்ணனுக்கு உடம்பு சரியில்ல!'

'இப்பத்தான் இங்கிருந்து வீட்டுக்குப் போனவர், போற வழியிலதான் இவர் செட்டியார் கிணற்றடியில் விழுந்து போனுர் நல்லவேளை நான் அந்த பக்கத்தால வந்திருக்காட்டி அண்ணனுக்கு வேறேதாவது நடந்திருக்கும்.' இதைக்கேட்டதும் ராமு துடித்தான்.

''இப்ப அண்ணன் எங்க சின்னண்ண!''

உடனடியா இவர் முருகர்ர காரப்பிடிச்சி ஆசுபத்திரிக்குக் கொண்டுபோய் வாட்டில சேர்த்துப்போட்டு இந்தா வாற வரத்துத்தான் நான்! அப்பிடியே உள்ரேட்டால போனதால இந்த விசயம் ஒருவருக்கும் தெரியாது! எங்க சித்திரா அக்காவங்க இருக்காங்களா! ராணிக்கும் வாழைச்சேனைக்கு ஒரு தந்தி யக் கொடுக்கவேணும்!''

இப்படி சின்னவன் அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு சித்திராவின் வீட்டுக்கு ஓடினுன்.

ராமுவிற்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. மீன்வாடிக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு சின்னவனுக்குப் பின்னுல் ஓடினுன்.

(தொடரும்)

## சிந்தனைச் சிதறல்

* தவறுன காரியத்தை செய்வதற்கு வழியே கிடையாது.
* கடவுளுக்குப் பயப்படு; எவர்க்கும் — எதற்கும் பயப்படத் தேவையில்லை.
* மனிதருடைய அன்பு மாறத்தக்கது; தேவ அன்பு மாருதது.
* இன்பமாயிருக்க இனிமையாய் பேசு.
* இறைவன் நம்மை வெற்றியுள்ளவர்களாக அல்ல; உண்மையுள்ளவர்களாக இருப்பதற்காகவே அழைத்திருக்கிறுர்.
* உன் இதய சுத்தி உன் வாழ்க்கையில் சக்தியை அளிக்கிறது.
* உண்மையான அன்பு 'நான் எவ்வளவு செய்யவேண்டும்?' என்று கேட்காது. 'நான் எவ்வளவு செய்யலாம்!' என்றே கேட்கும்.
* இறை சித்தத்துக்கு உள்ளமைவது என்பது அடிமைத்தனமல்ல அதுஆசீர்வாதம்
* இறைவன் தவறு செய்பவரல்ல; அவர் தவறக்கூடும் என நீ நினைப்பாயானுல் நீ தவறுகப் புரிந்துகொண்டிருக்கிறுய்.
* கவலை வரும்போது விசுவாசம் அழிகிறது: விசுவாசம் வரும்போது கவலை அழிகிறது.


— **ஆர். எஸ். செல்வரத்தினம்**
அல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 43

## (தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதலாம், இரண்டாம் திருமடல்கள்)



**பரிசு :**

**ரூபா 50/-, 25/-**

**முடிவுத் திகதி:**

**31-7-87**

முழுப்பெயர்: ..............................................................................................

முகவரி : ..............................................................................................

..............................................................................................

### இடமிருந்து வலம்

1. இதனைப் புறக்கணிப்பவன் பரிசுத்த ஆவியை அளித்த கடவுளையே புறக்கணிக்கின்றான்.

2. ஒரு இடத்தின் பெயரோடு இணைந்து வருவது.

3. சின்னப்பர் இங்கு தனியே தங்க முடிவு செய்தார்.

4. என்ன நேர்ந்தாலும் இது கூறப் பழக வேண்டும் என்கின்றார்,

6. தெசலோனிக்கேயர் இப்படி ஆவதே கடவுளின் திருவுளம் என்கின்றார்.

7. இறைவனுக்கு மட்டும் உரியது. எதிர்க் கிறிஸ்துவும் இதனைப் பெற முயற்சிப்பான்.

8. இவையெல்லாம் விட்டு விலகும்படி அறிவுறுத்துகின்றார்.

9. நற்செய்தியை அறிவிப்பதில் சின்னப்பரின் உடனுழைப்பாளர்.

10. அனைவருக்கும் வாசித்துக் காட்டப்பட வேண்டியது.

11. தெசலோனிக்கேயரின் முகத்தைப் பார்க்க ஆசிரியர் இவ்வாறு ஏங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

12. மீட்பின் நம்பிக்கையாக் கிறிஸ்தவன் அணிந்திருக்கவேண்டிய படையணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேலிருந்து கீழ்

1. இவர்களுக்கு வேதனை ஏற்படுவதுபோல் அழிவு வரும்.
2. நல்லது செய்வதற்கு முடிவில்லை.
5. கிறிஸ்துவிடம் விளங்கிய இந்தப் புண்ணியத்தை அனைவரும் அடையவேண்டுமென ஆசிக்கின்றார்.
8. இவர்கள் கைக்குத் தாங்கள் தப்பவேண்டுமென்கின்றார் ஆசிரியர்.

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 41 முடிவுகள்

### இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்கொடைகள் | 4. | விண்ணவர் |
| 6. | பரிசு | 7. | செசார் |
| 8. | புகழ் | 10. | பாடுகள் |
| 12. | சாவு | 13. | நெறிகெட்(ட) |
| 14. | உள்ளம் | 15. | வைசிலு(சிலுவை) |

### மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1 | நற்பண்பு | 2. | கண்ணீர் |
| 3. | வார்த்தைகள் | 5. | வயிறு |
| 9. | கடவுள் | 11. | கட்சி |

பரிசு பெறுவோர் :

**1ம் பரிசு:**

**K. M.** வசந்தா
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.

**2ம் பரிசு:**

அ. நெல்சன்
மே/பா அ. சோபஸ்
இளைஞர் முன்னேற்றக் கழகம்,
8/2, மத்தியாஸ் வீதி,
மட்டக்களப்பு.

பாராட்டுப் பெறுவோர்:

இ. மேரி இமெல்டா குரூஸ்
விவசாய விரிவாக்கல் நிலையம்,
மல்வத்தை, அம்பாரை.

செல்வி. பரிமளா ரேகினி ஹென்றி
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

செல்வி றெஜினா இராஜசிங்கம்
57/7, லேக் ரேட்,
சிங்களவாடி,
மட்டக்களப்பு.

**S.** மெக்டலின்
23, மத்தியாஸ் வீதி,
மட்டக்களப்பு.

**A.** யேசுராஜா
புனித வளன் இளங் குருமடம்,
விமான நிலைய வீதி,
மட்டக்களப்பு.

| | |
|---|---|
| பங்குபற்றியோர் | 68 |
| சரியான விடை அளித்தோர் | 51 |

அனைவருக்கும் எமது நன்றி!

விவிலிய நூலைப் படிக்கத் தூண்டவும், விவிலிய அறிவை விருத்திசெய்யும் நோக்குடனுமே விவிலிய குறுக்கெழுத்துப் போட்டியை நடாத்துகின்றோம். பரிசுகள் இதற்கோர் ஊக்குவிப்பு மட்டுமே. ஆகவே வாசக நேயர்கள், மாணவர்கள் இன்னும் அதிகமதிகமாக இப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்; பரிசும் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

— இ.ஆ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சித்திரைச் சிறப்பு

சித்திரைத் தொண்டன் தொடக்கத்திலேயே கிடைத்தது. அகில் ஜனநாயகம் ஒரு கோப்பை சாம்பார் என்ற கட்டுரை சிறப்பு. மற்றும் மரத்துப்போன இதயம் சிறுகதையும் உயிர்ப்பு பற்றிய கட்டுரையும் நன்முக இருந்தன.

A. P. பெர்ஞண்டோ
கொழும்பு – 13

## வேதனை தரலாமா?

தொண்டனே! நான் உனக்கு எழுதும் கடிதங்களையும் வாழ்த்துக்களையும் ஏன் பிர பிரசுரிக்க மறுக்கிருய்? இதனுல் என்மனம் வேதனைப்படுகிறது.

ஜோதிமணி
ஜிந்துப்பிட்டி, கொழும்பு.

## பக்கத்தைக் கூட்டுங்கள்!

தொண்டனே! நீ சுமந்துவரும் ஒவ்வொரு ஆக்கமும் நெஞ்சத்துக்கு நிறைவைத் தருகிறது. மேலும் சில பக்கத்தைக் கூட்டி நல் ஆக்கங்களைத் தந்தால் என்ன?

வி. றெ. மா. கரால்ட்
பாலையூற்று, திருகோணமலை.

(பக்கத்தைக் கூட்டலாம்தான். பணப்பை மெலிந்து கிடக்கிறதே!)

## அச்சகத்துக்கு பாராட்டு

தொண்டன் இதழை மிகச்சிறந்த முறையில் வெளியிடும் ஆசிரியர் குழுவுக்கும் அச்சிட்டு வெளியிடும் புனித செபஸ்தியான் அச்சக நிறுவன ஊழியர்களுக்கும், வாசகர்கள் சார்பில் எனது பாராட்டுக்கள். வளரட்டும் தொண்டன் பணி.

செல்வி கலிஸ்ரா அருளப்பு
அம்பாரை.

## பாராட்டு

சித்திரைத் தொண்டனில் 'மரத்துப் போன இதயம்' 'வாழ்வே வேதனைதான்' ஆகியவற்றை எழுதியோருக்கு எனது பாராட்டுக்கள்.

M. இளமதி விஜேசுந்தர்
மத்துகம.

## உருகியது உள்ளம்!

வைகாசித் தொண்டன் படித்தேன். ஆக்கங்கள் அனைத்தும் நெஞ்சைப் பிடித்தது ஆனுல் 'குமரியின் குமுறல்' என்ற கவிதை உள்ளத்தை உருக்கியது.

(உங்களைப் போலவே பலரது நெஞ்சங்களை 'குமரியின் குமுறல்' உருக்கியுள்ளது, எழுதியவருக்கு உங்கள் சார்பில் எமது பாராட்டுக்கள்) இ' ஆ

## கண்டேன் உன்னை; காணவில்லை என்னை!

தொண்டனை வாசிக்கும்போது என்னையே மறந்துவிடுகிறேன். வைகாசித் தொண்டனில் வந்த 'கவிஆரம்' என்னை மிகவும் கவர்ந்தது.

H. ரஜி
பாலையூற்று,
திருகோணமலை.

## வருமுன் காப்போம்

ஆனிமாத இதழில் வெளிவந்த ஒவ்வோர அம்சமும் சுவைக்கச் சுவைக்கச் சுவையாக இருந்தன. 'காலங்கடந்த சிந்தனை' சிறுகதை என்னைக் கவர்ந்தது. இளஞ் சமூகத்தினருக்கு முன்யோசனை தரும் ஆலோசனையாக அமைந்திருந்தது.

A. தயா
கோமாரி.

## கதை பிடித்தது!

வைகாசித் தொண்டனில் எனக்குப் பிடித்தது நவநீதன் எழுதிய 'கனவுகள் கற்பனைகள்' என்ற சிறுகதைதான்.

திரு. இ ரெட்ணவரதன்
பெரிய கல்லாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

அனைத்திலங்கை ரீதியில் 'தொண்டன்' நடாத்தும்

# சிறுகதைப் போட்டி

- கிறித்தவ - சமூகச் சிந்தனைகளைக் கதைகள் கருவாகக் கொண்டிருக்க வேண்டும்.
- முழுத்தாளில் (ஒரு பக்கத்தில் மாத்திரம்) நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் (ஏறக்குறைய 1000 சொற்கள்) எழுதப்படவேண்டும்.
- சொந்த ஆக்கமாகவும், பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் அவசியம்.
- எதிர்வரும் ஜூலைத் திங்கள் 30 நாளுக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆசிரியர் பெயருக்கு முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.
- கடித உறையின் இடது மேல் மூலையில் 'சிறுகதைப் போட்டி' எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
- போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் திரும்ப அனுப்பப்படமாட்டாது.
- பரிசு பெறத்தவறும் தரமான கதைகள் 'தொண்டன்' இதழில் பிரசுரிக்கப்படும்.
- போட்டி முடிவுகள் காலக்கிரமத்தில் 'தொண்டன்' சஞ்சிகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் அறிவிக்கப்படும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 27 - 06 - 1987ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org